தென்மொழி

இழந்த உரிமைகள் உழந்து பெறுக!

வையம் வாழ்த்தும்
வள்ளுவர் பெயரால்
பொய்யாம் குலமதப்
புன்மைகள் தவிர்த்துக்
கட்சிகள் என்னும்
களைகள் அகற்றி,
நச்சுக் கொள்கையின்
நலிவுகள் நீக்கி,
உலகத் தமிழினம்
ஒன்றுபட் டியங்குக!
இலகு செந்தமிழ்
எங்கும் பரப்புக!
பாழ்மை விலக்குக!
பழைமை புதுக்குக!
ஏழ்மை விரட்டுக!
இனிமை வித்துக!
இழந்த உரிமைகள்
இனியே
உழந்து பெறுக
உலகத் தமிழரே!

சுவடி : 15. ஓலை : 10.
விலை. 1. உருபா.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

நமக்கு வந்த மடல்கள்.

(இம்மடற் பகுதிக்கு எழுதுபவர்கள், தங்கள் கருத்துகளை நீண்ட கட்டுரையாக எழுதாமல் மிகமிகச் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகின்றோம்.)

0:644: அன்பு கெழுமிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். கடந்த சில திங்களாக வெளிவரும் ஆசிரியவுரைகள் மேல்தான் எத்தனைப் போற்றல்கள்—எத்தனைத் தூற்றுதல்கள்! பெரியாரின் பண்புகளைப் புகழும்போது நம்மைப் போற்றுவோர் அவருடைய குறைபாடுகளைச் சுட்டும்போது, முகம் சுளிக்கிறார்கள். ம. கோ. இரா. (முதல்வர்) அவர்களின் பண்பினை ஏத்தும்போது நம்மை வாழ்த்தும் நா, அவருடைய வரிசையறிந்து பரிசில் நல்காததைச் சுட்டும்போது—தூற்றுகிறது.

எந்த எந்த (மேலை நாட்டு) இதழ்களிலிருந்தோ தேவையற்ற சக்கைகளைத் துணுக்கு என்ற பெயரால் வெளியிடும் நம் தமிழ் இதழ்கள்—தூய தனித்தமிழ் இதழ்களைப் பற்றியோ அவற்றில் வரும் நல்ல கருத்துகளைப் பற்றியோ, மூச்சுக்கூட விடுவதில்லை. திரைப்படக் கதைகளைக் குறிப்பாகப் பேய்க்கதைகளை வேற்று மொழியிலிருந்து தமிழாக்கம் செய்து போடும் இதழ்களுக்குத் தமிழ்மொழியைப் பற்றி எள்ளளவும் கவலை—அக்கறை இருப்ப தில்லை. எளிதில் மக்கள் மனத்தை வயப்படுத்தும் எழுத்துலகத்தில் நுழைந்த இவர்கள்—எழுத்துலக அறங்களை மறந்து—பல்வேறு மதிமயக்க வெறிப் பொருட்களையும் அச்சு மையில் கலந்து, நாட்டில் விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். பெரியாரின் கொள்கை களைச் செயலாற்றப் பல்லாற்றானும் முனைப்போடு இயங்கும் முதல்வர், ஏன்...இந்த இதழ்களின் போக்கைச் சீர்திருத்தச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கூடாது? நடப்பியல்—என்ற போர்வையில் பெண்கள் பார்க்கவே அருவருப்பூட்டும் படங்களை இதழ்களில் போடுகின்றார்களே! திரையிலும் அறைக்குள் நடக்கும் கூத்தை அரங்கத்தில் காட்டும் காட்சிகளை அனுமதிக்கலாமா?

பெரியார்—பெரியார் என்று மாவட்டங்களுக்கு இருக்கும் பெயரை மாற்றுவதாலோ, 'எழுத்தில்' கைவைப்பதாலோ பெரியார் கண்ட குமுகாயம் உருவாகிவிடாது. அவருடைய சீர் திருத்த நோக்குகள் அனைத்தையும் நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சி செய்தல் வேண்டும். அரசு கண் திறக்குமா?

—அன்பு சோ. **முத்துமாணிக்கம். அமரர்பூண்டி—பழனி.**

0:645: தனித்தமிழ்க் காவலர் ஐயா அவர்களுக்கு, வணக்கம். ஈழ நாட்டில் திரையரங்க நுழைவுச் சீட்டுகள் பேருந்துச் சீட்டுகள் போன்றன எல்லாம் தமிழிலும் அச்சேற்றப் பட்டுள்ளமை கண்டு மகிழ்ச்சியும் மனச்சோர்வும் கொண்டேன். அங்குத் தமிழர்கள் மட்டுமே மதிக்கப் படுவதில்லை. தமிழ் மதிக்கப் படுகிறது. இங்குத் தமிழ் தமிழ் என வாய் கிழியப் பேசப்படுகிறதே ஒழிய, தமிழை நாம் புறக்கணிக்கின்றோம் என்பது மிக்க குருதி அழுத்தம் கூடத் தரலாம். இங்குத் திரையரங்க இசைவுச் சீட்டுகள் தமிழில் அச்சுப் பதிக்கக் கூடாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதோ என்ற

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

புதுச்சூள் உரைப்பீர்!

மத்தியூ என்னும் மதியிலாக் கேடன்
பத்தரை மாற்றுப் பசும்பொன் மணியை
மங்கையர்க் கரசியாம் மறக்குல மாதை
எங்கள் தமிழின இழிவைப் போக்கப்
பொங்கி யெழுந்த பொற்றெடி மகளை
மங்கா வீரத்து மாமணித் தாயை
இளைக்கா நாவின் எம்முடன் பிறப்பைச்
சளைக்கா உரையைச் சாயாத் துணிவை
கற்பின் கொழுந்தைப் பொற்புறு செல்வியை
வெற்பின் உறுதியை வீரத் திருவை
செங்களம் ஆடிடும் செந்தமிழ் மறத்தியை
மங்கையர் ஏத்தும் மகளிர் தலைவியை
மயலுறந் பாடும் மறத்தமிழ் இசையை
வைரவெண் மணியை வரிப்புலிப் பேடை
கனலுறப் பிளிறும் களிற்றுப் பிடியை
அனலுறப் பேசும் ஆர்வ அன்னையை
அறம்பாடி வந்த அருந்தமிழ் அணங்கைப்
புறம்பாடி யெழுப்பும் பூவையர் கொழுந்தைக்
கணவர் மருங்கில் கையொடு கையாய்த்
துணைவி யாகித் தோளொடு தோளாய்
நிழல்போல் என்றும் நெஞ்சொடு நெஞ்சாய்
அழலென வெழுந்த அரிமாப் பிணவைப்
பழித்தும் இழித்தும் பதரு நாவொடு
அழித்துப் பேசினன் என்னும் அழலுரை
செவிமடுத் தின்னும் செந்தமிழ் மறவர்
அவிசோ றுண்டிங் கமைந்திருப் பாரோ?
கவிழ்ந்த தலையொடு காத்திருப் பாரோ?
அவிழ்ந்த நெஞ்சோ டழன்றிருப் பாரோ?
குலப்பிரிவு உதறிச் சமயக்காழ்ப் பறுத்து
மலைப்பெருந் தோள்கள் மலியச் சிலிர்த்தே
பொங்கி எழாரோ? பூவையர் குலத்தின்
குங்குமக் குருதி கொப்பளி யாரோ?
நற்றாய் மங்கைவர்க் கரசியின் கழுத்துப்
பொற்றா லியின்மேல் புதுச்சூள் உரைத்துத்
தனித்தமிழ் ஈழம் தாங்க
முனித்தெழுந் தின்றே முனைக தமிழரே!

(அண்மையில் தம் கணவர் திரு. **அமிர்தலிங்கம்** அவர்களுடன் தமிழகம் வந்து, தமிழீழத் தமிழர் பட்ட கொடுமைகளையெல்லாம் இங்குள்ள தமிழ்மக்களிடம் எடுத்துரைத்த திருவாட்டி. **மங்கையர்க் கரசி அமிர்தலிங்கம்** அவர்களைக் கடந்த **3-4-79**-இல் இலங்கைப் பாராளுமன்றத்தில், கைத்தொழில் அமைச்சர் **சிறில் மத்தியூ,** மிகவும் இழிவுபடத் தாக்கிப் பேசியதைக் குறித்து எழுதியது இந்தப் பாடல். ஈழத்தமிழர் விடுதலைக் கூட்டணியின் அதிகார ஏடான **சுதந்திரன்** என்னும் இதழில் *(***29-4-79**-இல்*)* வெளி வந்தது.)

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி: 15 ஓலை 10.
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]
மேழம் தி. பி. உ௰க௰-
ஏப்பிரல்-மே-1979.

தென்மொழி
இலக்கிய இதழ்

பொறுப்பாசிரியர்: **பெருஞ்சித்திரனார்.**
ஆசிரியர்: **மா. பூங்குன்றன்.** அறி.இ; க.மு.
புரப்பாசிரியர்கள்
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
கலைக்கோயில் மாணிக்கம் (சிங்கை)
தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும், பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.]

தொழில் நல உரிமைகளை அடக்கி ஒடுக்க வேண்டா!

அ. தி. மு. க. அரசேற்ற பின் தொடர்ந்து தொழிற் போராட்டங்களும், கட்சிப் போராட்டங்களும் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றன. அரசியல் அதிகாரப் போட்டி நிலைகளில், ஆளுங்கட்சி எதைச் சொன்னாலும் அல்லது செய்தாலும் எதிர்க் கட்சிகள் தனித்தனியாகவோ ஒருங்கு கூடியோ எதிர்ப்பது என்பது வேறு. உண்மையாகவே எதிர்ப்புகள் உருவாகும்படி அரசு நடந்து கொள்வது என்பது வேறு. இன்னும் விளக்கமாகச் சொன்னால், எதிர்க்கட்சிகள் சார்பில் வருகின்ற எதிர்ப்புக்கும், பொதுமக்கள் சார்பில் வருகின்ற எதிர்ப்புக்கும் வேறுபாடுகள் உண்டு; வேறு வேறு பொருள்களும் உண்டு. இந்நிலையில் வருகின்ற எதிர்ப்புகள் அனைத்தும் எதிர்க்கட்சிகள் சார்பிலிருந்தே வருகின்றன என்று சொல்லி, ஆளுங்கட்சி, பொதுமக்கள் சார்பில் எழுப்பப்பெறும் போராட்ட உணர்வுகளையும், உரிமை முழக்கங்களையும் புறக்கணித்து விட முடியாது; புறக்கணிக்கக் கூடவும் கூடாது.

குடியரசு நாட்டில் போராட்ட உணர்ச்சி என்றும் இருக்கும்; எவரிடத்தும் இருக்கும். உரிமை உள்ளவர்கள், அதற்குத் தடையில்லாதவரை, அதனைப் பெற, கோரிக்கைகளை விடுத்தவண்ணமாகத்தான் இருப்பர்; கோரிக்கைகள் மறுக்கப்படும் பொழுது, போராடித்தான் தீர்வர். மக்களின் தன்னுரிமைகள் மறுக்கப்படுமானால், அதற்குக் குடியரசு என்கிற பெயர் பொருந்தாது. ஒரு குடியரசு நாட்டிற்குச் சரியான இலக்கணம் சொல்ல வேண்டுமானால், **'மக்கள் தங்கள் தேவைகளுக்காக உழைத்து, விளைவுகளைப் பகிர்ந்து கொள்வது'** என்று சொல்லலாம். இதற்காக அவர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பும் **அரசியலார்** என்பவர்கள், உண்மையிலேயே **பழங்கால முறையில் அமைந்த அரசனும், அவனைச் சேர்ந்த ஆட்சியாளர்களும் போன்றவர்கள் அல்லர்.** அவர்கள் மக்கள் நோக்கங்களை நிறைவேற்றி வைக்கும் **படிநிகராளியர்களே (Representatives).** மக்களுடைய உரிமைகளைக் கேட்கவும், **அவற்றை நிறைவேற்றவுந்தாம் அவர்களுக்குக் கடமை உள்ளதே தவிர, அவற்றைச் சரியா தவறா என்று ஆய்வதற்குக்கூட அவர்களுக்கு உரிமையில்லை.** பெரும்பான்மையான மக்கள் ஆட்சியாளர்களை அமைப்பதனால், அந்தப் பெரும்பான்மையினர் சொன்னால்தான் அல்லது விரும்பினால்தான் ஒன்று செய்யப்பட வேண்டும் என்று கூறுவது குழு அதிகார ஆட்சி (Oligarchy) ஆகுமே தவிர, மக்களாட்சி (Democracy) ஆகாது. ஒரு குழு என்பது பெரும்பான்மையாகவும் சிறுபான்மையாகவும் இருக்கலாம். மக்கள் படிநிகராளியர்களைத் தேர்ந்தெடுப்பதற்குத்தான் பெரும்பான்மையே யன்றி, மக்களுக்கு உரிமை வழங்கப் படுவதில் பெரும்பான்மை சிறுபான்மைக்கு இடம் இல்லை. **தனி ஒருவனுக்குள்ள ஒப்போலையுரிமை, அவனுக்குள்ள வாழ்வுரிமைக்குத் தரப்பட்ட உறுதிமுறியே தவிர, மற்றவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக மட்டும் தரப்பெற்று—அவன் ஒப்போலையிடும் கொஞ்ச நேரத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும்—ஓர் அடையாளச்சீட்டு ஆகாது.** அப்படியானால், தன்னைத் தேர்ந்தெடுக்காத மக்கள் நலன்களை அல்லது அவர்கள் தேவைகளை அல்லது கோரிக்கைகளை அரசு புறக்கணிக்கலாம் என்று ஆகிவிடும். சட்ட மன்றத்தையோ, ஆட்சி மன்றத்தையோ மக்கள் தேர்ந்தெடுக்கும் ஒருவகை முயற்சியே கட்சி—தேர்தல் - ஒப்போலை—இவையெல்லாம். ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டபின், ஆளுங்கட்சி, எதிர்க் கட்சிப் பாகுபாடு—தங்களுக்குச் சார்பாக ஒப்போலையிட்டவர்கள், எதிர்த்து ஒப்போலையிட்டவர்கள், தமக்குத் தேர்தலில் துணை நின்றவர்கள், துணை நில்லாதவர்கள் என்னும் வேறுபாடுகளெல்லாம் அடியோடு ஒழிந்து விடவேண்டும். ஆட்சியாளர் முறையில் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்னும் வேறுபாடு கூட, இரண்டு எதிர்நிலை வழக்காடிகள் நிலை போல் மதிக்கப்பெற வேண்டுமே தவிர, ஆளுங்கட்சி விரும்பிய

தெல்லாம் செய்யவேண்டும் என்றோ, அது செய்வதையெல்லாம் எதிர்க்கட்சி எதிர்க்க வேண்டும் என்றோ பொருளாகாது. அதே போல் ஆட்சியாளர் அமர்த்தப் பெற்றபின், மக்கள் அனைவருடைய கோரிக்கைகளுக்கும் ஒரே பொருள்தான்; ஒரே மதிப்புதான். இவர்கள் தன்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் அயல் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனும் பாகுபாட்டை வைத்துக்கொண்டு, கோரிக்கைகள் மதிக்கப் பெறுமானால், அது குடியரசாட்சியாக இருக்க முடியாது; குழுவாட்சியாகத்தான் இருக்க முடியும். இன்னும் சொன்னால், மக்களால் கோரப்படும் கோரிக்கைகள் என்ன என்ன என்று பார்க்கப்பட வேண்டுமேயன்றி, அக்கோரிக்கைகளை யார் எழுப்பியவர்கள்? சிறுபான்மையரா? பெரும்பான்மையரா? என்றெல்லாம் கணிப்பது குடியரசு அமைப்புக்குப் பொருந்துவதாகாது. எழுப்பப்படும் கோரிக்கை ஆட்சியின் இருதரப்பினராலும், கட்சி வேறுபாடின்றி ஆராயப்படுதல்வேண்டும். ஆராய்ச்சி என்பது, அதை இப்பொழுது நிறைவேற்றுவதா, பின்னர் நிறைவேற்றுவதா; அதன் தேவைக்கு என்னென்ன முயற்சிகள் செய்யப்பட வேண்டும்; அதை நிறைவேற்றக்கூடிய பொருள் நிலை எப்படி; என்பன பற்றியதாக இருக்க வேண்டுமே தவிர, அக்கோரிக்கை தள்ளக்கூடியதா அல்லது கொள்ளக் கூடியதா என்னும் மட்டையடி நிலையாக இருக்கக் கூடாது.

குடியரசமைப்பில், மக்கள் அனைவரின் அல்லது பெரும்பான்மையினரின் எண்ணங்கள்தாம் அல்லது கோரிக்கைகள்தாம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில்லை. சிறுபான்மையினரின் எண்ணங்களும் அல்லது கோரிக்கைகளும் கேட்கப்பட வேண்டும்; மதிக்கப்பட வேண்டும்; நிறைவேற்றப்பட வேண்டும். விளக்கமாகச் சொன்னால் ஆட்சியாளருக்குத் தவறென்றுபடும் கோரிக்கைகளுக்கும், சரியென்றுபடும் கோரிக்கைகளுக்குத் தரப்படும் அதே மதிப்புத் தரப்பட வேண்டும். சரி, தவறு என்று ஆய்வதன்று அவர்கள் கடமை; அஃது எப்பொழுது எப்படி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே அவர்கள் ஆயவேண்டிய கடமையாக இருத்தல் வேண்டும். அக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டால், அது மக்களுக்கு எவ்வகையில் நலம் பயக்கும் என்பதையே ஆட்சியாளர் ஆய்தல் வேண்டும். இனி, சில நிலைகளில், மக்கட்கு நலம் பயக்காத கொள்கையானாலும் அஃது ஏற்கப்பட வேண்டும். மதுவிலக்குக் கொள்கை, சில குடியுரிமை நாடுகளில் தள்ளப்படுவதற்கும், விலைமகளிர் கோரிக்கை, சில குடியுரிமை நாடுகளில் ஏற்கப் படுவதற்கும் இவையே அடிப்படைக் கரணியங்கள் என்று உணர்தல் வேண்டும். வேண்டுமானால் இவற்றுக்கு எதிரிடையான கருத்துகள் மக்களிடையில் உருவாக்கப் பெறலாம். அக்கருத்துகளை மக்கள் ஒப்புக் கொள்வதாக இருந்தால்தான் அவை தள்ளப்பட வேண்டும். மொத்தத்தில் மக்கள் சார்பில் இருந்துவரும் எத்தகைய கோரிக்கையும்

மதிக்கப்பட வேண்டிய, அல்லது சிந்திக்கப்பட வேண்டிய கோரிக்கை தான். இந்த முறைகள்தாம் எல்லாக் குடியரசு நாடுகளிலும் பின்பற்றப் படுகின்றன. **இந்த வகையில் குடிமக்களுடைய அறிவு நிலை உயர உயர, அவர்கள் கோரிக்கைகளும் உயர்ந்தவாகவே இருக்கும் என்பதைக்கருத்தில் கொண்டு மக்களின் அறிவு நிலை உயர்ச்சிக்குப் பாடுபடுவதை அரசு தன் முதற்கடமையாகக் கொள்ள வேண்டும்.** இனி, கோரிக்கைகள் சிறு அளவில் இருந்தாலும், அவை நிறைவேற்றப் படாத பொழுது அவை குற்றங்களாக வளர்ச்சியுறவே செய்யும். மற்றபடி சிறு அளவில் கோரப்படும் கோரிக்கையாளர்களை யெல்லாம் குமுகாயப் பகைவர்கள் (சமுதாய விரோதிகள்) என்று கூறி அடக்குவதும் ஒடுக்குவதும் குடியரசு அமைப்பு முறைக்கே பொருந் தாத செயல்கள் என்று அரசு உணர்தல் வேண்டும்.

அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபின் பலவகை மக்கள் போராட்டங்கள் எழுச்சியுற்றதை எவரும் மறத்தல் கூடாது. மாணவர் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம், தொழிலாளர்கள் போராட்டம், அரசுப் பணியாளர்கள் போராட்டம், உழவர் போராட்டம், எதிர்க்கட்சிகள் போராட்டம் என்று பலவகைப் போராட்டங்கள் தமிழகத்தில் கடந்த இரண்டாண்டுகளில் மிகுதியும் நடைபெற்றுள்ளதை அனைவரும் அறிவோம். இப் போராட்டங்கள் அனைத்துமே பொருளற்றவை என்று கூறிவிட முடியாது. போராட்டங்களை எதிர்க் கட்சிகள் தூண்டி விடுகின்றன என்றும், போராட்டங்கள் வன்முறையில் நடைபெறத் திட்டமிடப் பெறுகின்றன என்றும், போராட்டங்கள் நயன்மை (நியாயம்) அற்றவை என்றும் கூறி, அப் போராட்டங்களுக்குத் தவறான பொருள்களை அரசு கற்பித்து விடவும் கூடாது. போராட்டங்கள் எந்த வகையில் தோன்றினாலும், அவற்றை அரசு ஏற்று, அவை எதற்காகத் தோற்று விக்கப் பெறுகின்றன என்று ஆய்ந்து, அவற்றின் கோரிக்கைகளைத் தன்னால் இயன்றவரை—தனக்குப் பொருள்நிலை உள்ளவரை—நிறை வேற்றக் கருத்துக் கொள்ள வேண்டுமே தவிர, அவற்றை அடக்கி ஒடுக்க முற்படக் கூடாது. **கோரிக்கைகள் மதிக்கப் படாத பொழுது, மக்கட்குக் குடியரசு அமைப்பிலேயே நம்பிக்கை யின்மை தோன்றி விடும். இந்நம்பிக்கையின்மை உணர்வு வலுப்பெறுமானால், நாட்டில் தன்னதிகார முனைப்பே வலுப்பெறும்.** எனவேதான், கடந்தகால இந்தியக் குடியரசு அமைப்பில் பல விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடந்தன; இனி, நடக்கவும் முற்படுகின்றன.

போராட்டங்கள் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும்; மக்கள் நலன்களுக்குப் பெரும்பாலும் கேடு செய்யும் என்று கூறப் பெறுவனவெல்லாம் ஓரளவு உண்மை தான். ஆனால், அதற்காகப் போராட்டங்களே இருக்கக் கூடாது என்று கூறுவது சரியன்று.

அந்நிலை, ஒரு முடியரசு நாட்டில் அல்லது ஒரு தன்னதிகார ஆட்சியில் உள்ளது போலும் ஒரு நிலையாகவே இருக்கும். உரிமை வழங்கப் பெற்றது உண்மையானுல் போராட்ட உணர்வுக்கும் வழி யிருத்தல் வேண்டும். உரிமைதான் போராட்டமாகக் கிளர்கிறது. எனவே போராட்டங்களை அடக்குவது, உரிமைகளை மறுப்பது போன்ற ஒரு முற்றதிகார(சர்வதிகார)ச் செயலே ஆகும்! குடியர சாட்சி என்பது ஒரு கட்சியரசாட்சி யாகாது. முற்றதிகார—அல்லது தன்னதிகார ஆட்சியை ஒருவர் செய்தாலும் ஒன்றுதான்; ஒரு குழு அல்லது ஒரு கட்சி செய்தாலும் ஒன்றுதான். உருசியாவில் நடை பெறுவது **சமநிலைக் குடியரசு** ஆட்சி என்ற பெயரில் இருந்தாலும், அஃது ஒரு கட்சியதிகார ஆட்சியாக இருப்பதாலேயே, அதனைப் பலரோ அல்லது சிலரோ வெறுத்து ஒதுக்குகின்றனர். உண்மையாகச் சொன்னுல், ஒரு முழுவுரிமைக் குடியரசு நாட்டில், அறிஞர்கள் விரும்பாத ஒழுக்கக்கேடுகள் கூடத் தலையெடுத்துப் பொது நலன்களைச் சிதைக்கலாம். ஆனுலும் அந்நிலை தவிர்க்க வியலாதது. அப்பொழுது தான் அது முழுவுரிமைக் குடியரசு என்பதற்குப் பொருத்தமுடைய தாகும். நரிகள் எல்லாம் சேர்ந்து ஒரு குடியரசை அமைத்தால் அங்கு நரித்தன்மைகள்தாம் சிறப்புற்று விளங்குமே தவிர, அரிமாத் தன்மைகள் சிறப்புற்று விளங்க வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. மக்களெல்லாம் அரிமாத்தன்மை கொண்டவர்களாக மாற்றப் படாதவரை, நரிகளால் அமைக்கப்பெற்ற ஒரு குடியரசு நாட்டில் நரித்தன்மைகளையே உரிமைக்குரிய தன்மையாக மதிக்கப் பெறுதல் வேண்டும். நரிகளை அரிமாக்களாக மாற்ற முயல்வது ஆட்சியாளரின் கடமையன்று; அறிஞரின் கடமையே! ஒரு குடியரசு நாட்டில் அறிஞரின் கடமையே, ஆட்சியாளரின் கடமையாக ஆகிவிட முடியாது.

அமைதியை விரும்பும் நல்லவர் அல்லது அறிஞர் சிலர்க்குத் தொழிலாளர்கள், அல்லது பொது மக்கள் போராடுவது பிடிக்காமல் இருக்கலாம்; அல்லது அது நயபன்மையற்றதாகப் படலாம். அதனுல் ஆட்சியாளர் அப்போராட்ட உணர்வைத் தவருனது என்று கூறிவிட முடியாது. உண்மையான குடியரசு நாட்டில், ஆட்சியாளர்களின் தன் விருப்பத்துக்கு மதிப்பில்லை; மக்கள் விருப்பத்திற்குத்தான் முதல் மதிப்பு. மக்கள் மக்களாக இல்லாமல் மாக்களாகவே இருக்கலாம். ஆனுல் அவர்கள் விருப்பப்படி இயங்குவதுதான் அவர்கள் தேர்ந் தெடுத்த ஆட்சியாளரின் கடமையாக இருத்தல் வேண்டும். அவர் களைக் கருத்தளவில் முன்னேறச் செய்யும் முயற்சிகளில் முனைப்புக் காட்டலாமேயன்றி, அதுவரை அவர்களிடையில் எழுகின்ற உரிமைக் கிளர்ச்சி உணர்வுகளை மதித்தே ஆகல் வேண்டும். அவை தவருனவை என்று, அவற்றைப் புறக்கணிக்கவோ கட்டுப்படுத்தி அடக்கி ஒடுக்கவோ கூடாது. அப்படி முயன்ருல், அந்நிலை வேறு எதிர்நிலை உணர்வுகளைப் படிப்படியாக உண்டாக்கும் வலிமை பெற்றுவிடுவது

உறுதி. மக்கள் மனநிலை வரலாற்று நிலைகள் இந்த உண்மையைத் தான் நமக்கு வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

எனவே, கடந்த இரண்டாண்டுகளாகத் தமிழகத்தில் நடை பெற்று வரும் போராட்டங்களைப் பொறுத்த வரையில் இப்பொழு துள்ள அ.தி.மு.க. ஆட்சியின் அணுகு முறையை ஒரு குடியரசு நாட்டின் அணுகு முறையாகக் கொள்ள முடியாது. ஒரு முற்றுரிமை நாட்டின் அணுகு முறையாகவே கருத வேண்டியுள்ளது. இன்னும், அவ்வணுகு முறையால், அரசு கருதியது நடக்கவும் இல்லை. இறுதியில் வெற்றி பெற்றவெல்லாம் போராட்ட உரிமை உணர்வுகளே! எனவே, அரசின் அணுகு முறைகளால் அவர்கள் கருத்துப்படி, மக்கள் நலன்களும் காக்கப்படவில்லை. பொருட் சேதங் களும் ஏற்படாமல் தடுக்கப்படவில்லை. முடிவாக அரசு எதிர் பார்த்ததற்கு மாறான விளைவுகளே அப் போராட்டங்களால் ஏற்பட் டுள்ளன. வெளிப்படையாகக் கூறுவதானால், போராட்ட வுணர்வு களுக்கே அரசு இறுதியில் பணிய வேண்டியதாயிற்று. முழுமையாக இல்லையென்றாலும், ஒரு பகுதி வெற்றியாவது போராட்டக்காரர்கள் பெற்றார்கள் என்பதை அரசு மறுக்க முடியாது. இனி, மறு பகுதி வெற்றி அரசுக்குக் கிடைத்ததே என்று சிலர் நினைக்கலாம். இல்லை; அரசுக்குக் கிடைத்த அந்த மறு பகுதி வெற்றிக்கும், பொதுச்சொத்து களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கும், இழப்பிற்கும் கணக்குச் சரியாகப் போய்விட்டது. அஃதாவது அரசு தன் விடாப்பிடிக் கொள்கையால், அல்லது அடக்குமுறைக் கொள்கையால் தேடிக்கொண்ட இழப்பு, பொது மக்களின் நலன்களுக்குக் கேடுகளையே உண்டாக்கிக் கொடுத்தது என்று சொன்னால் மிகையாகாது. அரசு **முன்னறி வோடு** அல்லது **முன்னெச்சரிக்கையாக** நடந்து கொண்டிருந் திருக்குமானால், போராட்டங்கள் நடைபெறாமல் தடுத்திருப்பதுடன் ஏற்பட்ட இழப்புகளையும் தவிர்த்திருக்கலாம். ஆனால் அதிகார வெறியும், பதவிச் செருக்கும், பொது மக்களில் ஒரு பகுதியினரின் உரிமை உணர்வை மதிக்காமலும், அவர்களின் போராட்டக் கோரிக் கைகளை முதலிலேயே ஏற்காமலும் செய்து விட்டன.

பொதுமக்கள், தங்களை ஆட்சிக்குத் தேர்ந்தெடுக்கும் பொழுது மட்டும் நல்லவர்கள்; உயிருக்கு உயிரானவர்கள்; அரத்தத்தின் அரத்தம்; சதைக்குச் சதை; நரம்புக்கு நரம்பு! தங்களை ஆட்சிக்குத் தேர்ந்தெடுத்து, அவர்களின் உரிமைகளை அல்லது கோரிக்கைகளை முன் வைக்கும்பொழுது மட்டும் குமுகாயப் பகைவர்கள், வன்முறை யாளர்கள், பொதுநலக் கேடர்களா? காவல் துறையினரை ஊக்கி, அவர்களைத் தன்வயப்படுத்திக் கொண்டு, உரிமை உணர்வெழுப்பும், தொழிலாளர்களையும், உழவாளர்களையும், அடக்கி ஒடுக்குவது முற்றிலும் பேதைமையான செயல்! அவர்கள் கோரிக்கைகள் கேட்கப் படவேண்டும்; மதிக்கப்பட வேண்டும்; ஏற்கப்பட வேண்டும்! அக் கோரிக்கை **'ஆட்சியே ஒழிக'** என்பதாகக்கூட இருக்கலாம். ஏனென்றால் இது மக்களாட்சி. ஒப்போலையுரிமை பெற்ற ஒரு

ஒன்றுகாண் உலகத் தமிழினம்!

ஒன்றுகாண்; உலகத் தமிழினம்! இன்றே
உறக்கந் தவிர்த்தே எழுந்தது காண்!
நன்றுகாண் அதனின் நடையும் திறனும்;
நாட்குநாள் வலிந்தே பொலிவுறும் காண்!
அன்றுகாண் அரசும் அழிந்தது; வரலா
றழிந்தது; பெருந்திறல் அழிந்தது காண்!
இன்றுகாண், ஏழுந்தது புரட்சியும் புதுமையும்!
இணைந்தது தமிழினம் முனைந்தது காண்!

குன்றுகாண்! மலைகாண்! கடல்காண்! காடுகாண்!
குன்று உணர்வினில் மறைந்தன காண்!
நின்றுகாண்! சென்றுகாண்! எங்கும் தமிழினம்
நிமிர்ந்தது நிமிர்ந்தது சோர்விலை காண்!
கன்றுகாண் ஆயினும் களிறுகாண் இளைஞர்!
கதிர்விழி நோக்கினர் அதிர்நடை காண்!
வென்றுகாண் திரும்புவர்! தமிழ்நிலம் மீட்குவர்!
வீழ்ச்சியும் தாழ்ச்சியும் இனியிலை காண்!

பழம்பெரு ஞாலம்; பழம்பெருந் தாயினம்!
பழிப்பிலும் இழிப்பிலும் கிடந்தது காண்!
இழந்ததிங் குரிமை; இழந்தது பெருமை!
இழப்பிலை இனியது வளம்பெறல் காண்!
செழுந்தமிழ் வளர்க! சிறப்புற் றிலங்குக!
செந்தமிழ் இனமும் செழித்திடுக!
எழுந்தன புலிகள்! எழுந்தன கரிகள்!
எங்கும் விடுதலைக் கொடிநடவே!

(முன்பக்கத் தொடர்ச்சி)

திருடனும் மக்களில் ஒருவனே! ஒரு கொடியவனும் மக்களில் ஒருவனே! அவர்கள் திருடர்களாக இருப்பதாலும், கொடியவர்களாக இருப்பதாலும் மக்கள் இல்லை என்று தள்ளிவிட முடியாது. அத்தகையவர்களே இவர்களுக்கு ஆளும் உரிமையைத் தந்துள்ளனர். அந்த உரிமையால் ஆட்சிக்கு வந்து, அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு அல்லன செய்யும் ஆட்சித் திருடர்களைவிட, ஆளுமைக் கொடியவர்களையிட அவர்கள் நல்ல திருடர்களே! நல்ல கொடியவர்களே! ஏனெனில், திருடர்களும், கொடியவர்களும் குற்றவாளிகள் என்றால், எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் அரசுகளை அமைக்கும் எத்தகையவர்களும் பெரிய குற்றவாளிகளே! எனவே, குடியரசு நாட்டில் மக்கள் நல உரிமைகள்-இன்னுஞ் சொன்னால் **உழைக்கும் மக்கள் நல உரிமைகள்**-முதலில் கேட்கப்பட வேண்டிய கோரிக்கைகளே அன்றி, அடக்கி ஒடுக்கப்பட வேண்டிய **வன்ம உணர்வுகள் அல்ல** என்பதை அரசு உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

—பெருஞ்சித்திரனார்.



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு: சரு

யாண்டுசில வாக நரையுள வாகுதல்
யாங்கா குதியென வினவுதி ராயின்
பூண்டவென் மனைவியோ மாண்டமைந் தில்லாள்
ஆண்டொன் றீன்ற மக்களும் அறிவிலர்
ஒன்றுரை வினையொன் றுழப்பர் இளையரும்
மன்றறந் திறம்பியது எமையாள் அரசும்
ஆன்றோர் நெஞ்சம் அழலத் திரிதரும்
இறந்த ஒழுக்கினர் எள்ளுரை
நிறைந்த ஊர்யான் நெருங்கிய ஊரே!

பொழிப்புரை: கழிந்த யாண்டுகள் சிலவேயாக, நினக்கு நரை வந்து ஆகியது யாங்ஙனம் ஆயினை என வினவுவீராயின், யான் இல்லறம் பூண்ட என் மனைவியோ பெருமை பொருந்திய குணங்களொடு அமைந்திலள் ஆயினள்; ஆண்டுக்கு ஒன்றாக அவள் ஈன்று தந்த எண்ணில் மிகுந்த என் மக்களும் அறிவிலராக வாய்ந்தனர். ஒன்று உரையாக, வினை ஒன்றாகச் செய்து, என் துணையாளரும் எனக்குத் துன்பம் விளைவிப்பர்; மன்ற அற முறைகள் திரிந்து வேறுபட்டது, எங்களை ஆள்கின்ற அரசும்; இவையன்றிச் சான்றாண்மை நிரம்பியவர் உள்ளங்கள் கொதிப்புற்று வருந்தும்படி, எவ்விடத்தும் வீணே திரிந்து கொண்டிருக்கின்ற ஒழுக்கம் தவறியவர்களின் வாயினின்று வெளிப்படும் எள்ளத்தகுந்த இழிவுரைகள் நிறைந்து கேட்கின்ற ஊர் யான் நெருங்க இருந்து வாழும் ஊரே!

விரிப்பு: இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

இளையோன் ஒருவன் நரை வாய்ந்தானாக, அவனை 'நீ யாங்ஙனம் இவ்விளமைப் பொழுதிலேயே நரை வந்து வாய்க்கப் பெற்றனை' என்று வினவிய முதியோர் ஒருவர்க்கு அவன் விடை கூறுவதாகப் பாடப் பெற்றதிப் பாடல்.

இது புறநானூற்று **'யாண்டு பலவாக'** என்னும் பிசிராந்தையார் பாடலை நினைந்து அதற்கு மறுதலையாகப் பாடப் பெற்றது.

பொருந்திகையற்றுக் கவல் நிறைந்த வாழ்க்கை இளமையிலேயே நரையைத் தோற்றுவிக்கும் என்னும் உளவியலை அடியொட்டியது இது.

'யான் மணம் பூண்ட என் மனைவியோ மாண்பு அமைதல் இல்லாதவள் ஆயினள்; எனவே இல்லறச் சிறப்பின்மையால் என் மனங்கவன்று ஏறுபோல் பீடு நடை குன்றிக் குமைந்தேன். ஆண்டுக்கொன்றாக அவள் பயந்த மக்கள் பலருள் ஒருவரேனும் அறிவறிந்

தவராக வாயாமற் போயினமையால், பெறத்தக்க பேறின்றி நெஞ்சம் அழன்றேன். என் வினைவாழ்க்கையிலோ, என் துணையாளரும் பணியாளரும் யானொன்றுரைக்க, அவர் அக் குறிப்பறியாது, நின்ற நெடுமரம் போல், வினையொன்றியற்றிப் பாடுகெடுப்பாராகலின் மனம் உழன்றேன்; இனி, என்னையும் எம்மையும் ஆள்தற்கு வந்து வாய்த்த அரசோ, அவையத்து அறமுறை திரிந்து மாறி நடக்கும் அரசாக அமைந்ததாகலின், அதுபற்றியும் அறிவு கனன்று கடுந் துயருற்றேன். இனி, இவையனைத்தும் ஒருபுறங்கிடக்க, சான்றோர் நெஞ்சம் கொதிப்புற்று வருந்தும்படி, என்றும் எவ்விடத்தும், முனைப்பும் வினைப்பாடும் முற்றத் துறந்தாராய் இளைஞரும் பிறரும் இறந்துபட்ட ஒழுக்கமும் பண்பும் கொண்டு, தத்தமக்குள் பிறர் எள்ளத்தகுந்த இழிவுரைகளும் பழியுரைகளும் ஆடக் கொண்டோராக ஊர்வலம் வரும் நெரிசல் மிக்குடைய ஊரின் கண்ணே வந்து வதிய லுற்றேன் ஆயினேன்; பின் என்னை, எனக்கு இவ்விளமைக்கண்ணே முதுமை வந்தாற்போலும் தலை நரை காணுது போகுமோ; கண்டேன்' என்றுகை, 'என்னை? நினக்கு இளமை நரை பூண்டது' என்று வினுவியவர்க்கு உரை தந்தான் என்க.

யாண்டு சிலவாக—நினக்குக் கழிந்த ஆண்டுகள் சிலவே ஆக. (நின் அகவை (வயது) குறைவாக இருக்க.)

நரையுள வாகுதல்—நினக்கு நரை உளதாக இருத்தல்.

யாங்கு ஆகுதி- யாங்ஙன் ஆகினை.

என வினவுதிராயின்—என வினவுவீர் ஆயின்.

பூண்ட என் மனைவியோ—யான் மணம் பூண்ட என் மனைவியாகியளோ.

மாண்டு அமைந்தில்லாள்—மாட்சிமையற்று அமைவில்லாதவள் ஆகினள்.

ஆண்டு ஒன்று ஈன்ற மக்களும் அறிவிலர்—ஆண்டுக் கொன்றுக அவள் ஈன்று தந்த மக்களும் அறிவறியா மக்களாயினர்.

ஒன்று உரை வினை ஒன்று-உரைத்தது ஒன்றுகச் செய்வது ஒன்றுக.

உழப்பர் இளையரும்—என் வினைக்கென வந்து வாய்த்த எனக்குக் கீழாயினேரும், மனத்துயர் தருவர்.

மன்று......அரசும்—ஆளுமை முறை சார்ந்த அரசமன்றமும், நெறி முறை மாறி வேறுற்றுப் போனது.

ஆன்றோர் நெஞ்சம் அழல—அறிவும் ஒழுக்கமும் சான்ற உயர் நெறியாளர் தம் நெஞ்சு, புறச்சூழ்நிலை கண்டு கொதிப்புறும்படி.

திரிதரும் இறந்த ஒழுக்கினுர்—மாக்கள் போல் தாறு மாறுகக் குறிக்கோளற்று ஊர்க்கண், குறுக்கும் நெடுக்குமாகத் திரிகின்ற, தவிர்ந்த ஒழுக்கமுடைய அரம்ப மாக்கள்.

அட்டைப்பட விளக்கம்.

வான்புகழ் வள்ளுவர் நின்ற திருக்கோலம்!

—வ. வேம்பையன்.
அமைப்பாளர், கல்பாக்கம் கலை அறிவியல் மன்றம்.

மாமல்லபுரத்தில் தமிழ்நாட்டுச் சிற்பக்கலை பயிலகத்தில் வான் புகழ் வள்ளுவரின் 12 அடி, உயரமுள்ள உருவச்சிலை செய்து அமைக்கப் பட்டிருக்கிறது.

திருவள்ளுவரின் திருவுருவத்தை வெவ்வேறு கோலங்களில் இக்காலச் சிற்பிகள் அமைத்திருக்கிறார்கள். வலக்கையில் எழுத்தாணி பிடித்து இடக்கையில் குறள் ஏடு ஏந்திச் சடைமுடிபூண்டு தாடி-மீசை விளங்க இருக்கையில் அமர்ந்த உருவமாக அமைக்கப் பெற்றிருப்பது முதற் கோலமாகும். இத்தகைய படிமத்தைச் சென்னை மயிலையில் காணலாம். இது தமிழக அரசினால் ஏற்றுக் கொள்ளப் பட்ட படத்தை முற்றிலும் தழுவிய படைப்பாகும்.

இடக்கையில் குறள் ஏடு பிடித்து வலக்கையால் **"முப்பால் முத்திரை"** காட்டிச் சடைமுடியும் தாடிமீசையும் கொண்டு விளங்க, அரசவிருக்கைக் கோலத்தில் உலகப் பேராசிரியர் என்ற கருத்தை உணர்த்தி, ஆறுகால் பீடத்தின்மீது அமர்ந்து அறம், பொருள், இன்பம் ஆகிய வாழ்க்கை நெறிமுறைகளை வெளிப்படுத்தும் கோலத்தில் திருவள்ளுவரின் திருவுருவம் வள்ளுவர் கோட்டத்தில் அமைக்கப் பெற்றிருக்கிறது. இஃது இரண்டாம் கோலமாகும்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

எள்ளுநரை நிறைந்த-எள்ளத்தகுந்த இழிவுரைகளே எங்கும் கேட்கும்படி மலிந்து நிற்கின்ற.

ஊர் யான் நெருங்கிய ஊரே!—ஊராக இருக்கிறது, யான் வந்து நெரிசலில் நசுங்கி வதியும் ஊர்.

மாந்தனுக்குப் புறக்கூறாக அமைந்த செல்வ நிலை வாழ்க்கை எத்துணைச் சிறப்பாக அமையினும், அகக்கூறாக உள்ள இல்லற அமைவும், அதையொட்டிய நாள் நடைமுறைகளும் சிறப்புற அமைய வில்லையாயின் அவன் மகிழ்ச்சியுற்றிருக்க இயலாதெனும் உளவியல் உண்மையை உணர்த்தியதாகும் இப் பாடல்.

அகச் சிறப்பமை வின்மையால் மகிழ்ச்சி இயலாதாகவே எத்துணைச் சிறந்த உணவுண்டு இளமை பேணினும், உடல் காலக் கழிவின்றியே முதுமை தோற்றுவிக்கும் என்னும் உடலியல் உண்மையுங் கூறியது இது.

இது **பொதுவியல்** என் திணையும் **பொருண் மொழிக் காஞ்சி** என்னுந் துறையுமாம் என்க. o

வாழ்க்கையின் சிறப்பான நெறிமுறைகளை முப்பாலாக வகுத்து, தமிழ்பெருங்குடி மக்களுக்கும், ஏனைய உலகமக்கள் தொகையினருக்கும் உலகப்பொது மறையாக வழங்கி அன்றுபோல் இன்றும் வாழ்க்கை என்ற கப்பலுக்குத் திசைகாட்டும் கலங்கரை விளக்கமாகப் புதியதொரு கற்பனை மாமல்லபுர சிற்பிகளின் உள்ளத்தில் முகிழ்த்து அதுவே இங்கு வெளியிடப்பட்டுள்ள உருவமாகும்.

நின்ற கோலத்தில் வலக்கையை உயர்த்தி **"முப்பால் ஒளி"** ஏந்தி இடக்கையில் குறள் ஏடுதனைப் பிடித்து முப்பால் நெறியினை உணர்த்தும் இக்கோலம் மூன்ருவது வகையினைச் சாரும். பண்டைய காலத்தில் புத்தன் என்ற மா மாந்தனைப் பல்வேறு கோலங்களில் நம் நாட்டுச் சிற்பிகள் சமைத்தார்கள். அம்மரபிற்கு இணங்க அண்மைக்காலத்தில் வள்ளுவரைப் பல்வேறு கோலங்களில் சிற்பிகள் படைக்கத் தொடங்கி இருக்கிருர்கள்.

மாமல்லபுர சிற்பிகளின் கலையுணர்வில் முகிழ்த்த இவ்வறிவுச் சுடர் மிக அழகிய அமைப்பைக் கொண்டு விளங்குகிறது. சுண்ணச் சாந்திஞல் செய்யப்பட்ட இப் படிமத்தை ஏறத்தாழ **15000** மக்கள் கண்டு பாராட்டி இருக்கிருர்கள். திருவள்ளுவர் திருநாளான **15 1-1979** அன்று தமிழிகச் சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு முனுஆதி அவர்கள் திருவள்ளுவர் திருவுருவத்தைத் திறந்து வைத்துத் திருவள்ளுவர் திருவடிகளில் மலர்வைத்து வணங்கி மகிழ்ந்தார்கள்.

15-1-79 -ஆம் பக்கல் மாமல்லபுரத்தில் பயிற்சி பெறும் சிற்பக் கலை மாணவர்கள் கல்லாலும், வண்ணத்தாலும், சுதையாலும், மரத்தாலும் பல சிற்பங்களைச் செய்து தனியொரு சிற்பக்கலைப் பொருட் காட்சியினை நடத்திஞர்கள். அக்காட்சிக் கூடத்தை கூட்டுறவு அமைச்சரின் பேரவைச் செயலர் திரு. ஆனூர் கோ. செகதீசன் அவர்கள் விளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள்.

சிற்பக்கலைப் பயிலகத்தில் சுதைச் சிற்பப் பிரிவு ஆசிரியரும் மாணவர்களும் ஒருங்கிணைந்து படைத்தளித்த திருவுருவமே வான் புகழ் வள்ளுவர் படிமமாகும்.

வான்புகழ் வள்ளுவரின் வடிவத்தைப் புதிய கோலத்தில் அமைத்தும் சிற்பக்கலைப் பொருட்காட்சியை ஏற்பாடு செய்தும் தமிழர் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடிய மாமல்லபுரச் சிற்பக் கலைப் பயிலகத்தில் கண்காணிப்பாளர் சிற்பச்செம்மல் வை. கணபதி அவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் ஆகிய அனைவரையும் அவர்களுக்கு ஆதரவு அளித்த தமிழ்நாடு அரசையும் பாராட்டுகிறோம்.

ஆண்டுதோறும் இப்பொருட்காட்சியைத் திருவள்ளுவர் திருநாளில் (சுறவம்-2) தொடங்கி இருகிழமை நடைபெற ஆவன செய்ய அரசையும் அதிகாரிகளையும் அன்புடன் வேண்டுகிறோம். o

நூல்: **தனித்தமிழ்**

ஆசிரியர்: திரு. க. **தமிழமல்லன்**

வெளியீடு: திரு. **பொ. கண்ணையன், 163,** மாரியம்மன் கோயில் தெரு, தட்டாஞ்சாவடி, புதுச்சேரி-9.

விலை. **உருபா. 4-00. பக்கம்: 120.**

தனித் தமிழியக்கம் வலிவும் பொலிவும் பெற்று வளர்ந்து வரும் இக்காலத்தில், தனித்தமிழின் இன்றியமையாமை, பயன், நோக்கம், மொழிக்காவல் ஆகியவற்றைத் திரு. க. தமிழமல்லன் பதினைந்து தலைப்புகளில் விளக்கியுள்ளார். ஆசிரியரின் நோக்கமும் ஆக்கமும் மிகவும் பாராட்டத்தக்கனவாம். சுருங்கச் சொல்லி விளக்குதலும், அளவாக மேற்கோள் ஆளுதலும், அறிவியல் நெறியில் 'வெறி, என் போரை மறுத்துத் திருத்துதலும் சீரிய பகுதிகளாகும். குறிப்பாக 'வேண்டுமென்றே செய்யப்பட்ட கலப்புத் தமிழ்' 'கலப்புக்குக் கரணியர் யாவர்?', 'தமிழில் பிறமொழிக் கலப்பு தேவையா?' தூய மொழி இயக்கங்கள்' 'சொல்லாக்கம்' ஆகிய தலைப்புக் கட்டுரைகள் ஆராய்ச்சிப் பண்புடையன. தனித்தமிழ் அறிஞர்கள், தொண்டர்கள், தனித்தமிழ்க் கொள்கையும் தமிழரும், தனித்தமிழ் இதழ்கள்' என்னுந் தலைப்புக் கட்டுரைகள் வழிகாட்டும் உணர்வூட்டும் பகுதிகளாகும்.

எண்ணியதை எடுத்தியம்புங்கலையில் ஆசிரியர் திறமுடையவரா யுள்ளார்.

'தனித்தமிழ்' இயக்க இலக்கிய வரலாறுக ஆசிரியர் க. தமிழ மல்லன் மேலும் தொடர்ந்து நூல் எழுதித் தமிழ்த் தொண்டாற்றிட வேண்டும்.

இந்நூலைப் பள்ளி-கல்லூரி ஆசிரியன்மாரும், மாணுக்கரும், தமிழாசிரியன்மாரும் வாங்கியும் வாங்குவித்தும், கற்றும், பரப்பியும் தொண்டாற்றுதல் வேண்டும்.

திரு. சோமலெ. போன்ருர் தனித்தமிழ்ப் பற்றுளர் எனல் பொருந்தாது. அவர் போன்ருர் தனித்தமிழ்க் கொள்கையைக் கண்டித்துப் பேசியும் எழுதியும் வருதலைச் சுட்டியுணரல் வேண்டும்.

சுவையான நடையும், கருத்தாழமும் உடைய 'தனித்தமிழ்' நூல் தமிழுக்கு வாய்த்த நன்னூலாகும்.

—திறனுய்வாளன்.

தமிழ்ப்பண்பாட்டின் தனிச்சிறப்புகள்!

பழந்தமிழரின் வானநூலறிவு

—பேராசிரியர். **இரா. மதிவாணன். க.மு.**

கி.மு. 2500 ஆண்டுகளுக்கு முன்பே சீனர் வானநூலறிவில் சிறந்திருந்தனர் என்று கூறப்படுகிறது. கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன்பு கீழ்த்திசையிலிருந்து மேற்கே போந்த ஒரு மக்களினத்தாரிட மிருந்து வானநூலறிவைக் கிரேக்கர், அ ரா பி ய ர் ஆகியோர் பயின்றனர் என்று அமெரிக்க வானநூலறிஞர் குறிப்பிட்டிருப்பதாக திரு. கா. சுப்பிரமணியம் தாம் எழுதிய 'வானநூல்' (பக்-93)-இல் எடுத்துக் காட்டியிருக்கிறுர். கலியாண்டின் தொடக்கம் குறித்த குறிப்பு ஒன்றை, திருவாரூர் பிராமணரிடமிருந்து பெற்று **எம். இலெ செண்டில்** (M. Legentil) என்பவர் வெளியிட்ட செய்தியை மேற் கோள் காட்டி, வில்லியம் இராபர்ட்டுசன் என்னும் மேனுட்டறிஞர், தமிழ்நாட்டில் தா ன் உலகிலேயே முதன்முதல் வானநூற்கலை தோன்றியது என்கிறுர். அவர் கூறுவதாவது: "All the Knowledge which we have hitherto acquired of Principles and conclusions of Indian Astronomy is derived from the southern part of the Karnatic; and the tables are adapted to places situated between the meridian of Cape comorin and that which passes through the eastern part of ceylon." இச்செய்தி. திரு. சாம்பசிவம் (பிள்ளை)யின் Dictionary of Medicine Botony and Allied Sciences என்னும் அகரமுதலியின் முன்னுரையில் (பக்-15) கூறப் பட்டுள்ளது.

மேலை நாட்டினர், இ ரா சி ம ண் ட ல ம் எனப்படும் ஓரை மண்டலத்திற்கு 'விலங்குக்கூடம்' (Zodiac) எனப் பெயரிட்டனர். சப்பானியர் வகுத்த பன்னிரு ஓரை மண்டலங்களுள் ஒன்றனுக்குப் புலியின் பெயர் தரப்பட்டுள்ளது. இஃதொன்றே ஓரை மண்டலங்களைப் பற்றிய அறிவு நம் நாட்டிலிருந்து உலகின் பல நாடுகளுக்குப் பரவி யிருக்கிறது என்பதைக் காட்டும்.

கடல்கொண்ட குமரி நாட்டிலிருந்து மெசபதோமிய நாட்டிற்குச் சென்று, அங்கு உபாய்து என்னும் துறைமுகத்தைக் கட்டி அந் நாட்டு மக்களுக்குக் கல்வியும் தொழிலும் கற்பித்த மன்னன் அந் நாட்டு மக்களால் **ஓனசு** என்றழைக்கப்பட்டான். இவன் வாரணன் அல்லது வாணன் என்னும் பெயர் கொண்ட தமிழ் மன்னனுகலாம். இவன் நிறுவிய உபாய்து துறைமுக நகரில் அகழ்வாராய்ச்சி செய்த போது எண்கோண வடிவிலுள்ள விண்மீன் இலச்சினை கண்டெடுக்கப் பட்டது. இதுவான நூற்செய்தியைச் சுட்டுவதாக இருக்கக்கூடும் என்று அறிஞர் நம்புகின்றனர் எனக் **கோந்தரகோவ்** என்னும் சோவியத்து அறிஞர் 'The Riddles of three oceans' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். கடல் கொண்ட குமரி நாட்டிலிலேயே வானநூற்கலை வளர்ந்திருந்தது என இதன் வாயிலாக அறியலாம்.

வான நூற்கலையை வளர்த்தோர்

அறிவர், கணிவர், கணியர் என்போர் வான நூற்கலையைத் தொன்று தொட்டு வளர்த்து வந்தனர். ஆரியப் பிராமணரின் மேலாண்மை வலுத்த பிற்காலத்தில் இவர்களெல்லாரும் தாழ்த்தப் பட்டவராகி விட்டனர். அண்மைக் காலத்தில்கூட கணியர் என்னும் வகுப்பார் திருவாங்கூரில் வான நூல் வல்லுநராக இருந்தனர் என்பதை கே. பிள்ளை என்பவர் பின்வருமாறு வெளிப் படையாகக் கூறுகிறார்.

Kanian (எழுத்தச்சன்) is the repository of Ancient Science of Mathemathics, Astrology and Medicine.

In Travancore, the youngsters of the highest and the most orthodox of Brahmin families often received their general education from sudras and invariably learnt Astronomy and Medicine ever from the untouchables and unapproachables [G. K. Pillai, 'Origin and development of Caste.' (p-96)]

தாழ்த்தப் பட்டவரிடத்திலும் தீண்டப் படாதவரிடத்திலும் பிராமணர்கள் தம் பிள்ளைகளை அனுப்பி வானநூல் மருத்துவம் போன்ற அருங்கலைகளைக் கற்கச் செய்தனர் என்னும் உண்மைகள், ஆரியர் கற்ற கலைகளனைத்தும் தமிழரிடமிருந்தே பெறப்பட்டவை என்பதை உறுதிப்படுத்துகின்றன. சமற்கிருத மொழிக்கு முதன் முதலில் இலக்கணம் வகுத்த பாணினியும் சேர நாட்டுக் கடற்புறத்து ஊரினன் எனப்படுதலால் தமிழைப் பார்த்தே சமற்கிருதத்திற்கு இலக்கணம் எழுதப்பட்டது என்பதும் உறுதிப்படுகிறது.

கணிதம் வானநூல் மருத்துவம் போன்ற கலைகளில் வல்ல ஆரியபட்டர், வராகமிகிரர், தன்வந்திரி போன்றோரைக் குறிப்பிட்டுப் பெருமை கொள்ளும் பிராமணர், அவர்க்கும் காலத்தால் முந்தியவரும் ஆரியர்க்கு இவ்வருங் கலைகளைக் கற்பித்தவருமான தமிழறிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடாமல் இந்திய வரலாற்றில் இருட்டடிப்பு செய்துள்ளனர்.

வான நூலறிவின் தோற்றம்

பழங்காலத் தமிழர்க்கு வானமே காலங்காட்டும் கடிகையாக இருந்தது. குமரிநாட்டில் கடல் நடுவே வாழ்ந்த பழந்தமிழர் சிறந்த கடலோடிகளாக இருந்தனர். கடலோடிகளுக்கு விண்மீன்களே திசையறி கருவிகளாக இருந்தன. பரந்த கடலின் நடுவே திறந்த வானவெளியை உற்றுற்று நோக்கி, திசையும் காற்றின் போக்கும் பருவங்களின் வேறுபாடும் எதிர்வரும் புயலும் கணித்தறிய வேண்டிய கட்டாயம் அவர்களுக்குண்டாகியது.

வானத்தை உற்று நோக்கி மின்வீழ்வு, ஊர்கோள், தூமம், ஒரை மண்டல இருப்பு, அண்டச்சுழற்சி, பருவ வேறுபாடுகள், காலநிலைகள் ஆகியவற்றை அறிய அறிவர், கணிவர் என்னும் தனித்தனிப்

பிரிவினர் தமிழகத்தில் வாழ்ந்து வந்தனர். வான நூலறிவை வளர்ப்பதற்காகவே ஒரு பிரிவினர் பழந்தமிழகத்தில் வாழ்ந்திருந்தது ஒரு வரலாற்றுச் சிறப்புடையதாகும். கணிவனின் வான நூலறிவைப் புகழ்வதற்காகவே **'கணிவன் முல்லை'** என்னும் இலக்கணத்துறை அக்காலத்தில் ஏற்பட்டிருந்தது.

அறில் என்று சொல் விண்மீனைக் குறிக்கும். அறில் வட்டம் என்பது விண்மீன் பாதை என்னும் பால் வெளியைக் குறித்தது. இச்சொல் பழங் கன்னடத்தில் உள்ளது. அறில் கூட்டங்களை ஆராய்ந்து ஆய்வு செய்யும் வானநூலறிஞன் **அறிவன்** எனப் பட்டான். தொல்காப்பியத்திலும் அறிவன் கூறப்படுகிறான்.

வானத்துக் கோள் நிலைகளையும் மீன் நிலைகளையும் ஆய்ந்து காலங்கணிப்பதும் மழை, வறட்சி இயற்கையூறு ஆகியவற்றைக் கணிப்பதும் அறிவனின் தொழில். வான நூலறிவைக் கொண்டு மாந்தரின் நிகழ்கால வருங்கால நிகழ்ச்சிகளைக் கூறுவது கணிவனின் தொழில். வான நூலறிவு மட்டுமன்றி உலகியல் புறச் சூழல்களையும் கணித்து வருங்காலம் உரைப்பது கணியனின் தொழில். கணிவரில் தலைமை பெற்றவனை ஆசான் பெருங்கணி என்றழைத்தனர். எதையும் கணித்துக் கூறாமல் நிமித்தம் மட்டும் ஏதுவாக வருங்காலம் உரைத்தவன் நிமித்திகன் எனப்பட்டான். கணியன் பூங்குன்றனார், கணி மேதையார், கூடலூர் கிழார் ஆகியோர் கடைக்கழக கால வான நூலறிஞராவர்.

கணி — நூல்வல்லவன்

கணிவன் — நுட்பமான வான நூற் கணிதக் கலையைக் கற்றவன்

கணியன் — கணிக்கும் தொழிலுடையவன்

கணிவன், கணியன் என்னும் சொற்களின் பொருள் வேறுபாடறிய தலைவன் தலையன் என்னும் சொற்களோடு ஒப்பிட்டுக் காண்க.

தலைவன் — தலைமையைத் தன்பாலுடையவன்

தலையன் — தலையை யுடையவன்.

தலைவன் என்பது பண்புப் பெயரடியாகத் தோன்றிய சிறப்புப் பெயர். தலையன் என்பது சினைப் பெயரடியாகத் தோன்றிய கரணியப் பெயர். கணிவன் பண்பாகு பெயரடியாகத் தோன்றிய சிறப்புப் பெயர். கணியன் தொழிற் பெயரடியாகத் தோன்றிய கரணியப்பெயர்.

தரைச்செலவு மேற்கொள்வார்க்கு வரும் இடர்களை முன் கூட்டி உரைக்க முடியும். கடற்செலவு மேற்கொள்வார்க்கு வரும் துன்பங்களான புயல், கடல் கொந்தளிப்பு, பருவக்காற்று மாற்றம், போன்றவற்றை முன் கூட்டியுரைக்க முடியாத நிலை கண்டு அவ்விடர்ப்பாடுகளை வெல்லவே வானநூலறிவு, பழந்தமிழரிடை வளர்க்கப் பட்டது. தேவை கண்டுபிடிப்பின் தாய்' (**Necessity is the mother**

of invention) என்னும் முதுமொழிக்கேற்ப கடல் வாணிகம் பெருகப் பெருக வானநூலறிவும் ஒருசேர வளர்ந்து வந்தது.

Arora Borealis என்றும் வடவாமுகாக்கினி என்றும் கூறப் படும் வடவனலை முதன்முதல் கண்டறிந்தவர் தமிழகக் கடல் வாணிகரே யாவர். வடவனலைக் கடற்போக்கர்தாம் காணமுடியுமே தவிர நிலத்திலிருந்து எவரும் காணவியலாது. சூரியனில் கரும் புள்ளி பெருகும்போது வடமுனையில் வடவனல் தோன்றும். வடமுனைக் (வடதுருவ) காற்று மண்டலத்தில் தோன்றும் ஒளியே வடவனல். அது நெருப்பன்று. அதனாற்றான் அதை வடநெருப்பு என்றழைக் காமல் வடவனல் என்றனர். வடவனல், விண்வீழ் கொள்ளி, வால் மீன் போன்ற இயற்கையல்லாத நிகழ்வுகள் மண்ணுலகில் மாற்றமோ தீமையோ விளைக்கும் என்று அக்கால வானநூலார் கருதினர். இதனை 'இயற்கையல்லன செயற்கையில் தோன்றுதல்' என்று குறிப் பிட்டனர். கடல் கோள், எரிமலை, பெருவெள்ளம் வறட்சி ஆகிய வற்றுக்கு விண்ணிலுள்ள கோள்நிலை மாற்றம் ஒரு கரணியம் என்று கருதினர்.

தமிழரிடைதான் உலகிலேயே முதன்முதன் வானநூற்கலை தோன்றியது என்பதற்கு மற்றொரு வலிய கரணியமும் உள்ளது. வானநூற்கலைக்கு அடிப்படையானது கணிதக்கலை. பழந்தமிழ கத்தில் கணிதக்கலை நன்கு வளர்ந்திருந்தது. அணுவின் நூற்றி லொரு பகுதி 'கோண்' எனப்பட்டது. கீழ்வாயிலக்க வாய்பாடு மிக நுண் பொருள்களைக் கணித்தறியப் பயன்பட்டது. கோடிக்கும் மேற்பட்ட எண்களைக் குறிக்கத் தனித்தமிழ்ச் சொற்கள் அக்காலத்தில் ஆளப்பட்டன. 'அடுக்கிய கோடி' என்னுஞ் சொல்லைத் திருவள்ளுவர் எடுத்தாள்கிறார். தாமரை, ஆம்பல், வெள்ளம், நெய்தல், ஊழி, பெரு நெய்தல் என்பன அடுக்கிய கோடிகளைக் குறிக்கும் தமிழ்ப் பெயர்கள். கோடி எட்டு இடமதிப்பு (தானம்) கொண்டது. பெருநெய்தல் 36 இட மதிப்புகளைக் கொண்டது. இந்தப் பேரெண்கள் காலத்தையும் கோள் களுக்கு இடையிலுள்ள தொலைவையும் கணிக்கப் பயன்பட்டிருக்குமே யன்றி உலகியற் பொருள்கள் எவற்றையும் கணக்கிடப் பயன் பட்டிருக்க முடியாது. வானநூற்கலையும் கணிதக்கலையும் மிக ஓங்கி யிருந்ததால் தான் திருவள்ளுவர்,

> "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
> கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்னும் குறளில் கணிதக்கலைக்கு முதலிடமும் மொழிக்கு இரண் டாவது இடமும் தந்துள்ளார். ஏழு நாள்களுக்கும் பன்னிரு ஓரை மண்டலங்களுக்கும் இருபத்தேழு நாண்மீன்களுக்கும் வடசொல் விரவாத தமிழ்ப் பெயர்கள் பண்டு தொட்டே வழங்கி வந்ததும் பழந் தமிழரின் வானநூலறிவைக் காட்டுவனவாகும்.

கதிரவன் ஒரே இடத்திலிருக்கிறான் என்றும் நம் உலகமும் கோள்களும் அதனைச் சுற்றி வருகின்றன என்றும் பழந்தமிழர்

அறிந்திருந்தனர். கீழ்த்திசைக் கண்ணே சூரியன் நிலைத்திருக்கிறான் என்னும் பொருளில் தொல்காப்பியர் சூரியனைக் 'கொடி நிலை' என்றழைக்கிறார். கொடி—கிழக்கு, கீழ். கொடி நிலை—கீழே நிலைத்திருப்பது (சூரியன்).

கண்டறிய முடியாத இடப்பரப்பையும் கணித்தறிய முடியாத கால நீட்சியையும் கொண்ட பேரண்டப் பெருவெளியை 'முதற்பொருள்' என்கிறார் தொல்காப்பியர். காலமும் இடமுமாகிய முதற்பொருளில் முகிழ்த்தெழுந்த உயிர்ப் பொருள்களும் உயிரில்லனவும் ஒரு படித்தான ஆக்கதாக்கங்களுக்கு உட்பட்டவை என்பது அவர் கருத்தாகல் வேண்டும். அணுவின் இயல்பே அண்டத்தினியல்பாகவும் அண்டத்தியல்பே அணுவின் இயல்பாகவும் இருப்பதை.

"நிலம் தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்"

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

பழந்தமிழர் நல்ல நாள் பார்த்தே எப்பணியும் செய்வர். குடை நாட்கோள், வாணாட்கோள் என்னும் புறத்துறைகள் பண்டு தொட்டு இலக்கண மரபாக இருந்து வந்ததைத் தொல்காப்பியர் எடுத்தாண்டிருக்கிறார். அறிவர், கணிவர் போன்ற வானநூல் வல்லுநர்களை அழைத்து நல்ல நாளைக் கணிக்கச் செய்து தன் வெண் கொற்றக் குடையையும் உடை வாளையும் புறவீடு செல்லவிடும் குடை நாட்கோள், வாணாட்கோள் என்னும் நிகழ்ச்சிகளை மன்னன் நடத்தினான். 'நாள் செய்வது நல்லவர் செய்யார்' என்னும் முதுமொழி, வானநூலறிவின் பயன் பாட்டைப் பொது மக்களும் அறிந்திருந்தனர் என்பதைக் காட்டுகிறது. கணி என்னும் சொல்லுக்கு நூல்வல்லவன் எனப் பொருளிருத்தலால் வானநூல் தொடர்பான எண்ணிறந்த நூல்கள் தமிழில் இருந்திருத்தல் வேண்டும் என்பதில் ஐயமில்லை. o

இனிய இரு புதிய நூல்கள்

தகுதி
(மொழியாய்வுக் கட்டுரை)
விலை—**5-00**

நிறைந்தேன்
(பாத்தொகை)
விலை—**3-00**

(அஞ்சல் செலவு தனி)

ஆசிரியர்:
'தமிழூர்'. **ப. அருளி. வணி.இ.** (ச.இ).

கிடைக்குமிடங்கள் :

o அறை எண்: 2 மாணவரில்லம்.
17, இருசப்ப (கிராமணி) தெரு. கிருட்டிணாம்பேட்டை, சென்னை-5.
o தென்மொழி பொத்தக வெளியீட்டகம், சென்னை-5.

தமிழர் இணைப்புக் குழு

(ஈழத்தமிழ்க் கழகம், ஈழ விடுதலை இயக்கம், தமிழர் விடுதலைப் பேரணி இணைந்தது)

உலகத் தமிழர் இணைப்புக்குழு மாநாடு.

தமிழ் ஈழத்தின் முப்பது இலக்கம் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்காக—உலக நாடுகளின் ஒத்துழைப்பைப் பெறல் வேண்டி—ஆறுகோடி தமிழ்மக்களின் சார்பாக ஒரு மாநாட்டைக் கூட்டுவதற்கு, தமிழர் இணைப்புக்குழு முயற்சி எடுத்துக் கொள் கிறது. சிங்கள அரசை எதிர்த்து நடத்தப்படும் இப்போராட்ட மானது, 1615-ஆம் ஆண்டில் முதலாவதாக வந்த ஐரோப்பியரான போர்த்துக்கீசியரிடம் இழந்த தமிழ் ஈழத்தை மீட்பதற்கேயாகும். 480 ஆண்டுக் கால ஐரோப்பியர் ஆட்சிக்குப்பின், 1948-இல் ஆங்கிலேயர்களிடமிருந்து அதிகாரப் பொறுப்பேற்ற 110 இலக்கம் சிங்களப் பெரும்பான்மையினர், 30 இலக்கம் தமிழர்களின் புதுக் குடியேற்ற முதலாளிகள் போலாயினர்.

இலங்கையில் நடைபெற்ற அண்மைக் கால அரசியல் நிகழ்ச்சிகள் நம்பிக்கையற்ற நிலையினைக் கடுமையாக்கி எதற்கும் துணிந்து போரிடும் நிலைக்குத் தள்ளியிருக்கிறது. மொழி, பண் பாட்டுச் சீரழிப்பு, இன வேறுபாடு, மாந்த மற்றும் குமுகாய உரிமைகள் புறக்கணிப்பு—என்பவற்றின் மூலம் சிங்களவர் கடந்த 30 ஆண்டுக் காலமாக ஆட்சியைத் தங்களிடமே தக்கவைத்துக் கொண்டனர். இன்றைய அரசு படைத்துறையையும் அடிமை இதழ் களையும் வானொலியையும் வைத்து ஆட்சி நடத்துகின்றது. தமிழர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும், எந்த வகை யான உசாவலுமின்றிச் சிறையிலே தள்ளப்பட்டும் வருகின்றனர்.

எனவே, 30 இலக்கம் தமிழர்களின் விடுதலை, குடியரசு, மற்றும் உரிமைகளுக்காக முன்னின்று போராட தமிழர் இணைப்புக் குழு அமைக்கப்பட்டது. தங்களுக்குச் சொந்தமான, இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் சேர்ந்த பழம் பெரும் தமிழ் ஈழத்தை மீட்பதே நோக்கமும் முடிவுமாகும்.

எங்கள் குறிக்கோள்களாவன:

1) அடிப்படை மாந்த மற்றும் மற்ற உரிமைகள் எல்லாம் இலங்கையில் எவ்வாறு பறிக்கப்பட்டன என்பதை விளக்கி வெளிப் படுத்தல்.

2) உலக நாடுகள் மற்றும் மக்களின் ஒத்துழைப்பையும் உதவி களையும் திரட்டல்.

3) தமிழ் மக்கள் மீது சிங்கள அரசின் படைத்துறை, காவல் துறையினரின் அடக்குமுறை, குடியுரிமை அழிப்பு, முறை கேடான சட்ட நெறிகள் செயலாக்கம் பற்றிய உண்மைகளைப் பார்வைக்குக் கொண்டு வரல்.

உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் படிநிகராளிகள் வரும் செப்டம்பர்/அக்டோபரில் இலண்டனில் கூடுவதென முடிவு செய்யப் பட்டது.

(அடுத்த பக்கம் பார்க்க)

முனகல்கள்!

—அழகுமுதல்வன்.

(தனியார் கல்வி நிறுவனங்களில் பணியாற்றும் 95 விழுக்காட்டு ஆசிரியன்மார்களின், பெருமூச்சு மொழியின் சொற்களும், சொற்றொடர்களும்.)

நாங்கள்.........!

பண ஓவியங்களை வாங்குவதற்காகக் கண்களை விற்றுவிட்ட ஓவியப் பித்தர்கள்!

எங்கள் தாளாளர்கள் வீசியெறியும் உணவூதியத்திற்குக் காத்துக் கிடக்கும் நன்றியுள்ள நாய்கள்!

ஊதியத்தின் ஒரு பகுதியை நன்கொடையாக அவர்களுக்கே வழங்கும் இரவலர் வள்ளல் பெருமக்கள்!

பூட்டிய கூண்டுக்குள் பாடித்திரியும் விடுதலைப் பறவைகள்!

அவர்களின் இல்ல நாய்களை முத்தமிடவேண்டிய தன்மான அரிமாக்கள்!

அவர்கள் அடிக்கும் நகைச்சுவை எரிவுக்கு விழுந்து விழுந்து சிரிக்கும் கலைச் சுவைஞர்கள்!

விடுப்புக்காக வாயிற்படிகளில் தவங்கிடக்கும் 'இளிப்பு' உருவாக்கக் கூடங்கள்...!

அவர்கள் இல்லத்தரசிக்கு... நாங்கள காய்கறி வண்டிகள்!

மண்ணெய் வரிசையில் இனங்களோடு பணியமர்த்தப்படும் பகர வடிவங்கள்.

அவர்கள் குழந்தைக்கு...'அடே' விளிப்புகள்!

அரசுக்கோ...

ஒழுங்குபடுத்தும் சட்டங்களால் உறுப்பாண்மை வழங்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள்!

விளங்க வில்லையா?

நாங்கள்......

தனியார் கல்வியமைப்பின் தகுதிசால் ஆசிரியர்கள்...! o

(முன்பக்கத் தொடர்ச்சி)

இவ்வறிக்கையானது உலகெங்குமுள்ள தமிழ் இயக்கங்களுக்கும், அறிஞர் பெருமக்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது. இணக்கமான முடிவுகளின் அளவைப் பொறுத்து மறு அறிவிப்பு வெளியிடப்படும்.

தாங்கள் இவ்வழைப்பினை ஏற்று விரைவில் தங்கள் கருத்தினை அறிவித்தால் தமிழர் இணைப்புக்குழு நன்றி பாராட்டும். தங்களின் முழு ஒத்துழைப்பையும் எதிர்நோக்குகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
கிருட்டிணுவாசன்
அமைப்பாளர். த.இ.கு.

55, Warren Road
Colliers wood
London SW19 2HY

நாள்: 10-3-1979

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்:

மருத்துவ அறிஞர்: **கோ. கோவிந்தனார்.**

ஆண்மகனின் முதன்மையான கலவி உறுப்புகளில் கவிழ் சுரப்பியும் ஒன்றாகும். ஒளிநீரில் உள்ள நீரில் பெரும் பகுதி இங்கிருந்துதான் வருகின்றது. புணர்ச்சிக்கு முன் ஒருவகையான வழ வழப்பான நீரை உண்டாக்கி, சிறுநீர் புறவழியில் ஒளிநீர் எளிதில் பாயும் வண்ணம் சிறுநீர் புறவழியை வழவழப்பாக்குகின்றது. இச் சுரப்பி பழுதடைந்தால் பல உறுப்புகளுக்குக் கேடு உண்டாகிறது.

கவிழ் சுரப்பி, அழுத்தமான குவிவான ஒரு பொருள். சிறுநீர்ப் பைக்கு அடியில் அமைந்திருக்கிறது. சிறுநீர் புறவழி, சிறுநீர்ப்பை யிலிருந்து வெளியேறின உடன், அதை, இந்தக் கவிழ் சுரப்பி, ஒன்றேகால் விரல நீளம் வரை சூழ்ந்திருக்கிறது. கவிழ் சுரப்பி, சுரப்பிப் பொருள்களாலும், தசைநார் இழையங்களாலும் ஆயது. இச் சுரப்பியை மூன்று அறைகளாகப் பிரிக்கலாம். சிறுநீர் புறவழிக்குப் பின்புறம் ஒன்றும், அதன் இரண்டு பக்கங்களுக்கும் ஒவ்வொன் றாகவும் அமைந்துள்ளன. கவிழ் சுரப்பியின் அமைப்பை, கொடி முந்திரிக் கொத்துக்கு ஒப்பிடலாம். கவிழ் சுரப்பி, சிறு சிறு சுரப்பிகளால் ஆன பல தொகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு தொகுதியும் மூலத்தண்டிலோ அல்லது நேராகவே சுரப்பியிலோ இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிறு சுரப்பியைச் சுற்றியும், ஓர் அடுக்குத் தசை நார்கள் உள்ளன. இத்தசை நார்கள் கவிழ் சுரப்பியின் பொருள்களுக்கு இடையே அமைந்துள்ளன. இச்சுரப்பியைச்சுற்றி, ஒரு தடித்த தசைத் தொகுதி அமைந்திருக்கிறது. தசைகள் எல்லாம் ஒன்று போல் இணைந்து வேலை செய்கின்றன. அத் தசைகள் சுருங்கி சுரப்பியில் உள்ள நீரைப் பிழிகின்றன.

கவிழ் சுரப்பிக்கு நோய் கண்டால் அது மிகப் பெரிதாக வீங்கி விடுகிறது. நோய் நீங்கியபின் கூட அந்த வீக்கம் வடிவதில்லை. வீங்கிய நிலையே, பெரும்பான்மையும் நிலைத்து விடுகிறது. இந்த வீங்கிய சுரப்பி, தனக்கு இடையில் அமைந்துள்ள சிறுநீர் புற வழியை நெருக்குகின்றது. அதனால் சிறுநீர் பெய்ய துன்பம் ஏற் படுகிறது. அதே போன்று கலவி வேலைகளிலும் தடைகள் ஏற்படு கின்றன. கலவி ஒதுக்கு முறையால், சுரப்பியில் குருதித் தேக்கம் மிகுதியாக உண்டாகி, சுரப்பி வீங்குகிறது. பலவகை நோய்களை உண்டாக்கும் நுண்ணங்களாலும் இச்சுரப்பி வீங்கலாம். சிறுநீர் புற வழி, நோய் நுண்ணங்கள் மிகுதியாகப் பரவி உள்ள வெளி உலகோடு நேரிடையாகத் தொடர்பு உடையது. இச்சுரப்பி, சிறுநீர் பைக்கும், சிறுநீர் புற வழிக்கும் இடையில் அமைந்துள்ளது. ஆகவே இச்சுரப்பி, தன்னுள் வரும் நோய்களாலும், தன்னைச் சுற்றி உள்ள உறுப்புகளில் உண்டாகும் நோய்களாலும் தாக்கப்படலாம். சிறுநீர் பிரித்தி, மலக்குடல் ஆகியவற்றில் நோய் உண்டானாலும், இச்

சுரப்பி தாக்கப்படலாம். நேராகவே குருதி ஓட்டத்திலிருந்தும் இதற்கு நோய் பரவலாம். இச்சுரப்பியை மிகுதியாகத் தாக்கும் நோய் அழற்சி தான். இது கவிழ் சுரப்பி அழற்சி எனப்படும். கவிழ் சுரப்பி அழற்சியின் பல கேடுகளில் ஒன்றுதான் கவிழ் சுரப்பி வீக்க மாகும். பெரும்பான்மையாக வெள்ளை நோயின் காரணமாகவே கவிழ் சுரப்பியில் அழற்சி உண்டாகிறது. அதற்கு அடுத்தபடியான காரணம் குடல் நுண்ணலங்களால் வருவது. இந்த நுண்ணலங்கள், குடலில் உண்டாகக்கூடிய நுண்ணலங்களும், 'தெப்பலோ காக்கசு ஆரியசு' என்ற நுண்ணலங்களும் அடங்கியவையாகும். இந்த 'ஆரியசு' நுண்ணலங்களால் தான் கொப்புளங்கள் உண்டாகின்றன. உருக்கி நோய் நுண்ணலங்களாலும், இசுரெப்டோ காக்கை' நுண்ணலங்களாலும் கவிழ் சுரப்பி அழற்சி உண்டாகலாம்.

கவிழ் சுரப்பி அழற்சியைக் கடுமையானது, நாட்பட்டது என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். கடுமையான அழற்சி பெரும் பான்மையும் வெள்ளை நோயால் உண்டாகிறது. சிறுபான்மை குடல் நுண்ணலங்களாலும் உண்டாகலாம். நோயின் கடுமை மூன்று கிழமை வரைதான் இருக்கும். மருத்துவம் செய்தால் நோய் நீங்கும். மருத்துவம் செய்யாவிட்டால், கடுமையான அழற்சி நாட் பட்ட அழற்சியாக மாறுகிறது. ஆகவே பொதுவாக நாட்பட்ட அழற்சி என்பது, புணர்ச்சி நோய்களால் ஏற்படும் கடுமையான அழற்சிக்கு மருத்துவம் செய்யாது விடுவதால் ஏற்படும் நிலைதான். கலவி ஒதுக்கு முறையாலும், முழுவதும் புணர்ச்சியை விலக்குவ தாலும், இளமையில் அளவிற்கு மீறிய மிகுபுணர்ச்சியாலும், நாட் பட்ட கவிழ் சுரப்பி அழற்சி உண்டாகலாம். சில வேளைகளில் 'இசுரெப்டோ காக்கை' 'தெப்பலோ காக்கசு' நுண்ணலங்களாலும் இந்த நாட்பட்ட அழற்சி உண்டாகலாம்.

கடுமையான அழற்சியின் குறிகள்: கவிழ் சுரப்பியில் வீக்கமும், வலியும் தோன்றும். மலக்குடலில் தாங்கமுடியாத வலி ஏற்படும். அடிக்கடி சிறுநீர் கழிக்கத் தூண்டும். கடுமையான அழற்சிக்குக் காரணம் வெள்ளை நோயாயின், வெளியேற்றப்படும் சிறுநீரின் அளவு, பல நாட்களுக்கு, மிகக்குறைவாக இருக்கும். சிறுநீருடன் குருதி கலந்து வெளியேறலாம். கவிழ் சுரப்பி வழியாகச் செல்லும் சிறுநீர் புறவழியின் பகுதி, கவிழ் சுரப்பி வீக்கத்தால் அழுத்தப்பட்டு, துளை அடைக்கப்படுகிறது. அதனுல் சிறுநீர் வெளியேற்றம் தடைப் படலாம். ஒரு வித்து அல்லது இரண்டு வித்துகளுமே, இவ்வழற்சி யால் வீக்கமடையலாம்.

நாட்பட்ட கவிழ் சுரப்பி அழற்சியின் குறிகள் பல்வேறு தன்மைகள் கொண்டன. பல்வேறு உருவங்களில் தோன்றக்கூடியன. உடலில் கவிழ் சுரப்பிக்கு மிகத்தொலைவில் அமைந்துள்ள உறுப்பு களைத் தாக்கும் ஆற்றல் உடையன. இக்காரணங்களால் உடலில் ஏற்படக்கூடிய எதாவது ஒரு நோய் எதனுல் ஏற்பட்டது என்று

அறுதியிட்டுக் கூறுதல் கடினமாகிறது. மல வாயிலில் எப்பொழுதும் மலம் முட்டும் உணர்ச்சியும், அங்கு ஒருவகை வலியும் இருந்து கொண்டே இருக்கும். சிறுநீர் புற வழி, தொடைகள் சில வேளைகளில் வித்துகள், குடலைச்சுற்றியுள்ள சவ்வுகள், முதுகு ஆகிய இடங்களில் ஒருவகை வலி இருக்கும். ஆண்குறியிலிருந்து, விட்டுவிட்டு வெள்ளை விழுந்து கொண்டே இருக்கும். மூட்டுகளில் வீக்கம் ஏற்பட்டு, தாங்க முடியாத வலி உண்டாகும். இந்நோயின் காலப் போக்கில், கலவியில் வெறுப்பும், அலித்தன்மையும் ஏற்படலாம்.

கவிழ் சுரப்பி அழற்சிக்கு மருத்துவம் செய்யின் நோய் நீங்கும். கடுமையான அழற்சிக்கு முழு ஓய்வு வேண்டற்பாலது. கஞ்சி உணவு கொடுக்கப்பட வேண்டும். ஒழுங்காக மலம் கழிய வழி செய்ய வெண்டும். சிறுநீர், காரத் தன்மைமையுடனும், எரிச் சலுடனும் வெளியேறின் வார்க்கோதுமை நீரை மிகுதியாகக் குடிக்க வேண்டும். நான்கு மணிக்கு ஒருமுறை 2 சீரெடை (கிராம்) 'சோடியம் பைகார்பனேட்டை'த் தண்ணீரில் கரைந்து உட்கொள்ள வேண்டும். வெறியம் அறவே தள்ளப்பட வேண்டும். வலிமிகக் கடுமையாக இருந்தால், 'மார்பியா' அல்லது 'பெல்லடோனு' உள்ள வளையச் சொருகிகளை மலக்குடலில் சொருகி வைக்கலாம். 'ஆசுப்பிரின்' இரண்டு மாத்திரைகள் உட்கொள்ள வேண்டும். சிறுநீர் வெளியேரு விட்டால் குத்தி மூலம் வெளியேற்ற வேண்டும். இதை, ஒரு மருத்துவர்தாம் செய்யவேண்டும். பிழை ஏற்படின் சிறுநீர் புற வழிக்கும், சிறுநீர் பைக்கும் மிகுந்த கேடு உண்டாகும் சிறுநீர் வெளியேருது, தங்குவதை நீக்க, முதுகின் கீழ் பக்கம், இடுப்பு, மேல் தொடைகள் ஆகிய பகுதிகளைப் பொறுக்கக்கூடிய வெந்நீரில் அமிழ்த்து இருக்கும்படி செய்ய வேண்டும். இது 'சிட்டு' குழியல் முறை எனப்படும். இம்முறையால் தேக்கமும், அமுத்தமும் நீங்குவ துடன் வலியும் தணிகின்றது. —தொடரும்

தென்மொழி அன்பர்கள் கவனிக்க.

கடுமையான தாள் விலை யேற்றத்தாலும், அஞ்சல் கட்டண மிகுதியாலும், பிறவகை அச்சுத்துறைப் பொருள்கள் விலை கூடுத லாலும் தொழிலாளர் மிகைச் செலவுகளாலும் **தென்மொழி**யைத் தொடர்ந்து தூய, உயர்ந்த வெள்ளைத் தாளிலேயே அச்சிட முடியா மைக்கு வருந்துகிறேம். அவ்வாறு தொடர்ந்து அச்சிடுவதானல் இதழின் விலையை ஒன்றரை மடங்காக்க வேண்டியிருக்கும். இந்நிலை தென்மொழியை வாங்குபவர்க்குக் கூடுதலான சுமையாக விருக்கும். எனவே இனி, **தென்மொழி** செய்தியச்சுத் தாளிலேயே அச்சிடப் பெறும். அதுவுமன்றிச் செலவுகளை ஈடுகட்ட, சில வேளைகளில் சில பக்கங்களைக் குறைத்தும் அச்சிட வேண்டியிருக்கும். தவிர்க்க வியலாத இந்நிலைகளுக்கு அன்பர்கள் பொறுத்துக்கொள்ள வேண்டிக் கொள்கிறேம். — அமைச்சர்.

கோவை, தென்மொழி இயவத்தின் அறிக்கை

**கோவை ஈரோடை (ஈரோடு) உதகை மாவட்டத்
தென்மொழி அன்பர்கள் கவனத்திற்கு**

பேரன்பின் இனிய தமிழ் நெஞ்சீர்,

நந்தமிழ் நாட்டின்கண் எண்ணிலடங்காச் சிறு அமைப்புகள், தமிழ் மன்றங்கள் ஆங்காங்குத் தத்தம்மால் இயன்ற பொது நலத் தமிழ் வளப் பகுத்தறிவுத் தொடர்பாய் வினைகளில் ஈடுபட்டு இயங்கி வரும் வினைப்பாடுகளை நாமறிவோம். அங்ஙன் அவ்வவ் வியக்கங்கள் இயங்குவதால் விளையும் பயன்களை அரசியல் கட்சிகள் தட்டிச் சென்று, தமிழை வணிகப் பொருளாக்கி வருவதையும் நாமறிவோம்.

நம் இயக்கங்கள் பல பெயர்களில் சிதறுண்டு இயங்கி வினையாற்றுவதால், வினைக்குறுக்கமும், காலத் தாழ்த்தமும் ஏற்படுகின்றது. இதனால் மக்களிடையே நமது கொள்கையைப் பரப்ப இயலாமல், நம் மக்களிடையே இன்னும் நம்மை அடையாளங் காட்ட இயலாமல் தவிக்கிறோம். இஃது எதனால்? நாம் பல பெயர்களில் சிதறுண்டு வினையாற்றுவதால்தானே!

ஆகவே இனியும் இந்நிலை நீடித்தால், இனி என்றும் நாம், நம் மொழி, இன ஒற்றுமையை ஏற்படுத்தி வெற்றிகாண முடியாது.

ஆகவே இந்நிலைகளை அறவே தவிர்த்து, நாம் அனைவரும் ஒரே அமைப்பின் கீழ் வினையாற்ற வேண்டும் என்பதே இயவத்தின் வேண்டுகையாம். ஆகலின், அனைத்துத் **தென்மொழி** அன்பர்களும், இவ்வறிக்கையைக் கண்ணுற்ற பின்றை நிமையமும் கடத்தாது **"தென்மொழி அன்பர்கள் ஒருங்கிணைப்பு"** வினைக்குத்துணை நின்றியங்குமாறு, இகல் கொள்ளாது இனியேனும் செம்மையாக வினையாற்ற வேண்டி அழைக்கின்றோம்.

உண்மைத் தமிழ் நெஞ்சங்கள், வீறுகொண்ட தென்மொழி மறவர்கள், ஒருங்கிணைந்து வினையாற்ற விழைவோர் உடனே **இயவத்திற்கு** எழுதித் தங்கள் பெயர்களைப் பதிந்து கொள்ளுமாறு உரிமையோடு வேண்டுகிறோம்.

மு. குறிப்பு:—ஒருங்கிணைப்பு நாளும், இடமும் அன்பர்களுக்குத் தனித்தனியே மடல் வழி அறிவிக்கப்படும்.

இவண்,
ஆள்வினைக் குழுவிற்காக.
தென்மொழி அரங்க. தமிழ்மணி
வயவர்.

(தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
தென்மொழி அரங்க-தமிழ்மணி,
வயவர்-தென்மொழி இயவம். 4, குமரன் தெரு,
கோவை-641015)

என் இலங்கைச் செலவு.

—பெருஞ்சித்திரனார்.

சில குறுஞ்சாலைகள் வழியாகச் சென்ற வண்டி ஒரு நெடுஞ் சாலையில் திரும்பிச் சென்று ஒரு மருந்துக்கடை முன்பாக நின்றது. நின்றதும், நிமலன், 'அந்த மருந்துக் கடையில் பாருங்கள் ஐயா' என்று இருக்கையில் அமர்ந்தபடியே என்னிடம் சுட்டிக் காட்டினார். கடைப்பக்கம் பார்த்தேன். வண்டி வந்து நின்றதை அடையாளம் கண்டு கொண்ட ஓரிளம் பெண் உடனே எழுந்து நின்று, வியப் புடனும் சிறிது கலவரத்துடனும் எங்களைப் பார்த்துச் சிரித்தாள். 'அந்தப் பெண்தான் எனக்குத் துணைவியாக வரப் போகிறவள்' என்று நிமலன் விளக்கினார். அந்தப் பெண்ணும் அங்கிருந்தபடியே எங்களைப் பார்த்து வெட்கத்துடன் சிறு புன்னகை தவழ எனக்கு வணக்கம் வைத்தாள். நானும் வணக்கம் வைத்து விட்டு 'வண்டியை எடுங்கள் தம்பி, போதும்' என்றேன். உடனே நிமலனும் அந்தப் பெண்ணைப் பார்த்துக் கையை அசைத்து விட்டு, வண்டியை இயக்கினார். வண்டி பழையபடியே முழுப் பாய்ச்சலுடன் ஓடியது.

'என்னங்க ஐயா, பெண் நன்றாக உள்ளதா? எனக்கு முற்றிலும் ஏற்றவள் தானா' என்று கேட்டார். 'ஆம், நல்ல பெண்ணாகவே தெரிகிறது. மிக அமைதி; நல்ல அழகு; குணமும் நன்றாக இருக்கும் என்றே படுகிறது' என்று அவர் கருத்துக்கு ஏற்ப இசைவு கூறினேன். நிமலன் மிகவும் மலர்ச்சி அடைந்தார். வண்டி யாழ்ப் பாணத்தின் எல்லையைத் தாண்டி வேலணை போகும் கடற்பாலத்தை அடைந்து அதன் மேல் சென்று கொண்டிருந்தது.

வேலணை யாழ்ப்பாணத்திலிருந்து மேற்கே 2 கற்கள் தொலைவில் உள்ள ஒரு சிறு தீவு. அந்த இரண்டு கற்கள் தொலைவுள்ள கடல் இடைவெளியை ஒரு செயற்கைச் சாலையால் இணைந்திருக்கின்றனர். இத்தகைய கடலிடைச் சாலைகள் யாழ்ப்பாணத்தை யொட்டியுள்ள வேறு சில தீவுகளுக்கிடையிலும் உள்ளன. பெரும்பாலும் யாழ்ப் பாணத்தை யொட்டிய மேற்குப் பகுதிகளில்தாம் இலங்கைக்குச் சொந்தமான தீவுகள் பல உள்ளன. அவற்றுள்தாம், அண்மையில் இலங்கை அரசுடைமையான கச்ச தீவும் அடங்கும். கச்ச தீவுக்குக் கடலிடைச்சாலை இல்லை. இத்தீவு ஒன்றுதான் இலங்கையின் வட மேற்குக் கடற்கரையிலிருந்து 30 கற்கள் தொலைவில் உள்ளது. மீதித் தீவுகளான மண்டை தீவு, வேலணை தீவு, நைனா தீவு, நெடுந் தீவு, அனலை தீவு, எழுவை தீவு, காரை தீவு, பாலை தீவு, இரணை தீவு ஆகிய பத்து தீவுகளும் 2 முதல் 20 கற்கள் தொலைவில், அதே வடமேற்குக் கடற்கரைப் பகுதியில், திக்காலுக் கொன்றாக, (பெரும் பாலும் தமிழீழக் கடற்கரைப் பகுதியில்தாம்) அமைந்துள்ளன. அவற்றின் பரப்புகள் 2 முதல் 24 சதுரக்கற்கள் வரை உள்ளன. நான் போகவிருந்ததும் பண்டிதர் க. பொ. இரத்தினம் அவர்கள்

குடியிருந்ததுமாகிய வேலணை தீவின் மொத்தப் பரப்பே பெரியது. அது 24 சதுரக் கற்கள். மற்ற தீவுகளெல்லாம் இதைவிடச் சிறியனவே.

நெடுங்காலமாக ஒரு தீவுக்கும் இன்னொரு தீவுக்கும் போய்வரப் படகுகளையே பயன்படுத்தி வந்துள்ளனர். அண்மைக் காலத்தில் தான் அவற்றுள் பலவற்றுக் கிடையில் கடலிடைச் சாலைகள் அமைக்கப் பெற்றுள்ளன என்று நிமலன் கூறினார். நாங்கள் வேலணை பண்டிதர் வீட்டுக்குப் போய்ச் சேரும்பொழுது 7-மணி யிருக்கும். வீட்டில் தமிழ் மறைக் கழகச் செயலர் திரு. யோகநாதன், திரு. செந்தில் வடிவேல் முதலிய நண்பர்கள் இருந்தனர். பண்டிதர் பாராளுமன்ற நடவடிக்கையாகக் கொழும்பு சென்றிருந்தார். வீட்டில் திரு. க. பொ. இ. அவர்களின் துணைவியார் திருவாட்டி சிந்தாமணி அம்மையார் இருந்தார்கள். திரு. க. பொ. இ. அவர்களுக்குப் பிள்ளைப் பேறு இல்லை. எனவே திருவாட்டி சிந்தாமணியம்மையார் அவர் களின் தமக்கை பிள்ளையான திரு. நிமலனைத் தங்கள் வளர்ப்புப் பிள்ளையாக எடுத்துத் தம் பெற்ற மகனைப் போலவே வளர்த்துக் கொண்டிருந்தனர். நிமலனும் அவர்களையே தம் உரிமைப் பெற்றோ ராகக் கருதி மிக்க அன்புடனும் உரிமையுடனும் இருந்தார்.

திரு. க. பொ. இ. அவர்களின் தனிச்செயலர் திரு. யோக நாதனும் பிறரும் என் வரவால் பெருமகிழ்ச்சியுற்றனர். திரு. யோக நாதன் தாங்கள் எப்படி என் தொலைவரியைப் பெறுமையால் வானூர்தி நிலையத்திற்கு வந்து என்னை வரவேற்க வியலாமற் போயிற்றென்று வருத்தத்துடன் விளக்கினார். தமிழ் மறைக் கழகச் செயலர் திரு. சிவசாமி ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த தமிழ் மறைக் கழக நிகழ்ச்சிகளைப் பற்றி விரிவாக என்னிடம் எடுத்துக் கூறினார். அடுத்துத் தமிழக அரசியல் பற்றியெல்லாம் என்னிடம் பலவாறு கேட்டனர். மொத்தத்தில் அங்கிருந்தவர்களுக்குக் கடந்த தேர்தலில் தி.மு.க. தோல்வியுற்றதும், அ.தி.மு.க. அரசேற்றதும் அவ்வளவாக மகிழ்ச்சி தரவில்லை. கலைஞர் தோற்றது அவர்களுக்குப் பெரு வருத்த மாக இருந்தது. அதன் பின்னர் நானும் கடந்த ஆகத்துக் கலவரங் களைப் பற்றியும், அப்பொழுதுள்ள அரசியல் நிலைமைகள் குறித்தும் விரிவாகக் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

ஒரு மணிநேர உரையாடலுக்குப் பின், நிமலன் உணவுண்ண அழைத்தார். நான் தங்குவதற்குரிய அறை செப்பனிடப் பெற்றிருப் பதைக் காட்டிப் படுக்கை அமைப்புகளையெல்லாம் என் விருப்பப்படி கேட்டு, திரு. யோகநாதனின் உதவியுடன் அவற்றை நிறைவுபெற அமைத்தார். அதன்பின் நிமலனுடனும் பண்டிதர் அவர்களின் அளியர் மகன் செயந்தன் என்னும் இளைஞருடனும் இரவு உண வருந்தினேன். இரவில் இடியாப்பம் செய்திருந்தனர். இடியாப்பத்தை இலங்கையின் சிறப்புணவு எனலாம். பெரும்பாலும் எல்லார் வீட்டிலும் காலையிலும் இரவிலும் இடியாப்பமே உணவாகச் செய்

கின்றனர். கைக்குத்தல் அரிசியிலேயே இடியாப்பம் செய்வதால் சிறிது நிறமாறியிருந்தது. ஆனால் இடியாப்பத்தையே அங்கு அனைவரும் விரும்பிச் சிறப்பாக உண்ணுகின்றனர்.

இரவு உணவுண்டு விட்டுச் சிறிது ஓய்வாக வீட்டின் முன்னிருந்த வெளிக் கூடத்தில் அமர்ந்திருந்தேன். நிமலனும் திரு. யோகநாதனும் " 'செட்டியார்' வரவில்லையா? செய்தி தெரியாதா?" என்று பேசிக் கொண்டிருந்தனர். "யாரவர் செட்டியார்" என்று கேட்டேன். "அவர் இராமலிங்கம் என்ற பெயரினர்; பண்டிதர் அவர்களுக்கு மிகவும் வேண்டியவர்; குடும்ப நண்பர்; எல்லாப் பணிகளிலும் பண்டிதர் அவர்களுக்குத் துணையாக இருப்பவர்; அவரை உடல்வாகு கருதி நாங்கள் செட்டியார் என்று அழைப்போம்" என்று விளக்கினார்கள். அதன்பின் இரவு படுக்கைக்குப் போகும் முன் அவர்கள் கூறிய 'செட்டியார்' திரு. இராமலிங்கம் அவர்களும் வந்தார். என்னைப்பார்த்து நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தார். திரு. இராமலிங்கம் மிகவும் அன்பானவர். பிறர் மனம் அறிந்து நடக்கும் பண்புள்ளவர். சிரித்துச் சிரித்துப் பேசுவார். அவரையே நான் தமிழகம் திரும்பும் வரை எனக்குத் துணையாக திரு. பண்டிதர் அவர்கள் அமர்த்தியிருந்தார். அவரும் என் குழந்தைத் தனமான மனவுணர்வுகளை அறிந்து மிகவும் ஈடுபாட்டோடு என்னிடம் பழகியிருந்தார்.

நான் வெற்றிலை பாக்கு போடுபவன் என்பதை அறிந்து கொண்டபின், திரு. இராமலிங்கம், 'அவையெல்லாம் தேவையான அளவில் உள்ளனவா' என்று கேட்டார். நான் சீவல் ஓரளவு உள்ளதாகவும், வெற்றிலைதான் தீர்ந்து போகின்ற நிலையில் உள்ளதாகவும் கூறினேன். உடனே நான் பயன்படுத்துகிற சீவல் இங்குக் கிடைக்காதென்றும் பச்சைப் பாக்கைத்தான் அங்குள்ளவர்கள் பயன்படுத்துகிறார்கள் என்றும், வெற்றிலை கூட நான் வைத்திருப்பது போல் கிடைக்காதென்றும் கூறி, வீட்டுக்கு உடனே சென்று கொஞ்சம் வெற்றிலை, பாக்கு, புகையிலையுடன் விரைவில் திரும்பி வந்தார். அவர் கொண்டு வந்திருந்த வெற்றிலையையும் பாக்கையும் பார்த்தவுடன் எனக்குப் பெரு வியப்பாக இருந்தது. வெற்றிலை சிறிய உணவுத்தட்டு போல் மிக அகலமாகவும் கருப்பாகவும் தடிப்பாகவும் இருந்தது. பச்சைப் பாக்கைப் பாக்கு வெட்டியில் சிறுசிறு சீவலாகச் செதுக்கிக் கொண்டு வந்திருந்தார். எனக்கோ, இனி ஊர் திரும்பும் வரை இவற்றைத்தான் பயன்படுத்த வேண்டும் என்றிருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல், அந்த வெற்றிலையையும் பாக்கையும் ஒருமுறை பயன்படுத்திப் பார்த்தேன். பாக்கை வெற்றிலையுடன் போட்டு மென்றவுடன் எளிதாகக் கரைந்தது. வெற்றிலையும் ஏதோ ஒரு சுவையாகவும் மணமாகவும் இருந்தது. திரு. இராமலிங்கமும், 'இங்குள்ளவர்கள் இதைத்தான் ஐயா, விரும்பிப் பயன்படுத்துகிறார்கள். அவர்களுக்கு நீங்கள் கொண்டு

வந்திருக்கும் வெற்றிலை பிடிக்காது' என்றார். 'ஓ! அப்படியா!' என்று அவரிடம் வியந்து கூறிவிட்டு, இவற்றைக் கொண்டு ஒருவாறு சமாளித்து விடலாம் என்று இருந்து விட்டேன்.

திரு. யோகநாதனும் எங்கள் பேச்சில் கலந்து கொண்டு, தமிழகத்தைப் பற்றிப் பலவாறு வினவிக் கொண்டிருந்தார். திரு. யோகநாதன் மிகவும் சுறுசுறுப்பானவர். நன்கு படித்தவர். ஏதோ ஆசிரியப் பணி செய்து கொண்டு, பண்டிதர் அவர்களுக்குத் தனிச் செயலராக இருந்து வந்தார். அவரின் பேச்சு, நடவடிக்கைகள் அனைத்தும் எனக்குப் பிடித்திருந்தன. அவர் கள்ளங் கவடற்றுச் சிரித்துக் கொண்டேயிருந்தார். திரு. இராமலிங்கமும் அப்படித்தான். எப்பொழுதும் நகைச்சுவை ததும்பப் பேசுவார். யாரிடத்தும் மிகத் துணிவாகக் கருத்துகளைக் கூறுவார். அவர்கள் இருவரும் பேசிய தமிழ் எனக்கு முதலில் வியப்பாகவும், விளங்காத படியாகவும் இருந்தது. பெரும்பாலும் யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் எல்லாருமே தமிழை ஆங்கிலேயர் ஆங்கிலம் பேசுவதுபோல் விரைந்து பேசுகின்றனர். அதிலும் திரு. இராமலிங்கம் பேசிய தமிழை மிகவும் சுவைத்தேன். சொற்கள் பின்னிப் பிணைந்து ஒன்றுடன் ஒன்று கலந்து உருமாறி விரைந்து வெளிவந்து விழுந்தன, அவர் பேச்சில். சில நேரம் நிறுத்தி மீண்டும் கேட்டு விளங்கிக் கொள்வேன். பண்டிதர் அவர்கள் பேச்சும் மிக விரைவு. ஆனால் எல்லார் பேசுகின்ற பேச்சிலும் சில சொற்களுக்கு ஒருவகை இழுப்பு இருந்தது. அது சில நேரங்களில் சுவையாகவும், சில நேரங்களில் நகைப்புத் தருவதாகவும் இருந்தது. எல்லாரும் ஒரே படியாகவே பேசினர். கழகக் காலத் தமிழகத்தில் ஒருவேளை தமிழர் இவ்வாறு பேசியிருக்கலாம் என்றுகூட கற்பனை செய்து மகிழ்ந்தேன். அவர்கள் பேச்சுகளில் சில சிறப்பு மரபுகளும் இருந்தன. 'புறப்பட்டு வந்தான்' என்பதை 'வெளிக்கிட்டான்' என்கின்றனர், அவர்கள். திரு. இராமலிங்கம் அவர்கள் ஒருமுறை, நான் ஒரு கூட்டத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கையில், 'என்ன ஐயா, நீங்கள் வெளிக் கிடலையா?' என்று கேட்டவுடன் எனக்கு வெருக்கென்று இருந்தது. பொருளையே வேறுபடியாகக் கொண்டு, சிறிது நேரம் திகைப் படைந்து தடுமாறி விட்டேன். அதன் பிறகு நிலைமையைச் சரி செய்து கொண்டு, 'இதோ புறப்பட்டு விட்டேன்' என்று கூறினேன்.

இப்படியாக அவர்கள் பேசும் பேச்சையே அன்றிரவு 1மணி வரை சுவைத்துக் கேட்டிருந்து விட்டு, அதன்பின் திரு. இராம லிங்கத்தையும், திரு. யோகநாதனையும் வீட்டுக்கனுப்பி விட்டுப் படுக்கைக்குச் சென்றேன். திரு. யோகநாதன் போகும் பொழுது, 'பண்டிதர் ஐயா, காலையில் வந்து விடுவார்; நாளைக்கு மாநாட்டு வேலைகளெல்லாம் நிறைய உள்ளன' என்று கூறிவிட்டுச் சென்றார். நெடுநேரம் தூக்கம் வராமல் ஏதேதோ நினைத்துக் கொண்டிருந்து விட்டு, 2 மணியளவில் தான் அன்று இரவு உறங்கியிருப்பேன்.

(—தொடரும்)

இனமும் மொழியும்

—புலவர். தி. நா. அறிவுஒளி. க.மு.,

எந்தச் சிக்கலையும் தீர்க்கப் போராட்டம் நிகழ்த்த வேண்டிய கட்டாய நிலை இக்காலத்தில் ஓங்கியுள்ளது.

உணர்வால் வாழும் இல்லற வாழ்விலும் பூசலும் போராட்டமும் பகையும் வழக்கும் புகைச்சலும் பொருமலும் ஏற்பட்டுவிட்டமை காண்கிறோம்.

புறத்துறைகளில் போராட்டம் நிலவுவதில் வியப்புள்ளதோ? 'போராட்டமே வாழ்க்கை' என்னும் புத்திலக்கணமே தோன்றி விட்டது! இந்நிலை மாந்தரின வளர்ச்சியின் அறிகுறியா? தளர்ச்சியின் அச்சக்குறியா? தெளிவாகப் புரிந்து கொள்ள வியலாமல் மக்கள் தவிக்கின்றனர்.

"வாழ்வில் போராட்டம் தோன்றலாம்; போராட்டத்தில் வாழ்வு நிலைக்குமா?"

ஆராய்ந்தே முடிவு காணல் வேண்டும்.

குடும்பங்களுக்கிடையே போராட்டம் என்றும் நிகழ்வதுண்டு. நாடுகளுக்கிடையே போராட்டங்கள் எக்காலத்தும் நிகழ்வதைக் காட்டுவதன்றோ வரலாறாக வளர்கிறது! இனங்களுக்கிடையே 'போராட்டம்' தோன்றுவதும் இயல்பாய் அமைகிறது.

ஓர் இனத்துக்குள்ளேயே கூடப் 'போராட்டம்' தோன்றுவதுண்டு. அது பெரும்பாலும் இருவர் தலைவரிடையே தோன்றும் தன்னலம்—பகைமை—வலிமை காட்டுதல்—செருக்கு என்பவை காரணியமாக விளையும்.

ஈரினங்களுக்கிடை தோன்றும் 'போராட்டம்' தற்காப்படிப் படையிலேயோ, 'வலியது ஓங்குதல்' என்னும் இயல்பூக்க அடிப் படையிலேயோ, தன் தலைமையைத் திணித்து இன்னோர் இனத்தை அடிமையாக்கும் நோக்கடிப் படையிலேயோ விளையும்.

வாழ்க்கை நெருக்கடிகள் மக்களின் பண்புகளை மாற்றுகின்றன; அன்றேல் அழிக்கின்றன. பண்பு இறுகுவதும், இறுவதும், நெகிழ்வதும், சிதைவதும், சீர்குலைவதும், அலைவதும் நெருக்கடி நிலைகளாலேயே அமைகின்றன.

இனப்பண்புகளுக்குக் கேடு விளையும்போது ஓரினம் வாளா விருக்குமானால், அவ்வினமும் அழியும்; பண்பும் அழியும். ஆகவே தற்பண்பைக் (தம்மினப் பண்பை) காக்க ஓரினம் முழு மூச்சோடு போரிட்டுக் காத்தல் வேண்டும்.

'தம்மினம் உயர்வுடையது என்றும், பிறிதோரினம் இழிந்தது' என்றும் 'மறைநூல்' 'மனுநூல்' 'கீதை' 'இராமகாதை-பாரதக் கதை-பாகவதக் கதை' முதலியன எழுதி இனப் பகைமையை மரபு மரபாக வளர்த்து வருவது வடமொழி வழிப்பட்ட ஆரிய இனம்.

தாமே உயர்ந்தோர்; அறிவுடையோர்; பண்பிற் சிறந்தோர்; தம்மிடமிருந்தே பிறர் அறிவும், பண்பும், கருத்தும் கடன் கொண்டனர் எனல் 'இனவெறி வல்லாண்மை' யாகும். இனப்போருக்கு இஃதே வேராகும்.[1]

1. "முதலாளிய நாடுகளில் பிற்போக்கு அறிவியலாரிடையே இனக் கொண்முடிபு எனப்படுவது விரிவாகப் பரவி இருக்கிறது. தங்கள் மக்களின் எல்லைகளுக்குள் ஆளும் இனத்தினரை "உயர்ந்த" இனமாகவும் உழைப்பாளிகளைத் "தாழ்ந்த" இனமாகவும் இனக் கொள்கையாளிகள் மதிக்கிறார்கள். தங்கள் அரசின் எல்லைகளுக்கு வெளியே உள்ள மக்களை இனக்கொள்கை போற்றுநர் "தாழ்ந்த" இனங்களில் சேர்க்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில் தங்கள் மக்களை அவர்கள் "உயர்ந்த" இனத்தவராக மதிக்கிறார்கள். இவ்வாறு செய்கையில் அவர்கள் மாந்தரின் 'இன' வகைப்பட்டவையும் குமுக பொருளியல் வகைப்பட்டவையுமான குழுப் பிரிவுகளை உயிரியல் குழுப் பிரிவுகளுடன் தவறுகக் கலந்து குழப்புகின்றனர்.

(திரு. மி. நெசுதூர்க்கு எழுதிய 'மாந்த இனங்கள்' ப: 13)

"வெள்ளை" இனம் "உயர்ந்தது" என்றும், "நிறமுள்ள (கருப்பு, மஞ்சள்) இனங்கள் "தாழ்ந்தவை" என்றும், இனக்கொள்கையினர் வழக்கமாகக் கருதுகின்றனர். சில அறிவியலார்-சிறப்பாக மேற்கு செருமானிய, ஆங்கில, அமெரிக்க அறிவியலார், "ஆரிய" கொண் முடிபைப் பரப்புகின்றனர். வடக்கு, நடு ஐரோப்பாவைச் சேர்ந்த மாந்தவியல் மாதிரிகளின் ஏதேனும் ஒரு குழுவோ அல்லது அதன் பிறங்கடையினரோ தாம் "உயர்ந்த" இனம் என்று கூறுகின்றனர்; இந்தக் கொண் முடிபுடன், மங்கோலிய அல்லது நீக்கிரோ இனமே உயர்வானது என்ற கருத்துகளும், மீண்டும் மீண்டும் தலை தூக்குகின்றன. சான்றாக, சப்பானியப் படைஞர் குழுவின் ஆட்சிப் பரப்பு விரிவாக்கக் காலத்தில் 'சப்பானிய மஞ்சளினம்' உயர்வானது என்ற கருத்தை அக்குழுவின் கொள்கையாளர் பரப்பி வந்தனர். சீனர் மற்ற மக்களினங்களைவிட உயர்ந்தோர் என்ற பெரு வல்லரசுக் குரிய கருத்தோட்டங்கள் முற்றிலும் அறிவியலுக்கு ஒவ்வாதவை; தீங்கானவை. "உயர்ந்த" இனங்கள் "செயலூக்கம் மிகுந்தவை" என்றும், வரலாற்றில் தலைமை உறுப்பாண்மை தாங்குவதாகவும் அடிப்பட்டு இருப்பதையே நிலையாகக் கொண்ட "தாழ்ந்த" "செய லூக்கம் அற்ற" இனங்களின் அடிமை உழைப்பைப் பயன்படுத்தி, பண்பாடு, நாகரிகம் அனைத்தையும் அவையே நிறுவியதாகவும் இனக்கொள்கையினர் வலிந்துரைக்கின்றனர். பெரும்பாலான இனக் கொள்கையினரின் கருத்துப்படி குமுகாயத்தின் வளர்ச்சி இனச் சிறப்புத் தன்மைகள் மீது தாக்கம் நிகழ்த்துவது இல்லை. மாறாக இனச் சிறப்புத் தன்மைகளே மக்கட் குலத்தின் குமுகாயக் குழுக்களது முன்னேற்றத்திற்கோ பிற்போக்கிற்கோ கரணியம் ஆகின்றன. இவ்வாறு, மாந்த இனங்களின் உடலியல், உளவியல் நிகரியமின்மை

"வடமொழியிலிருந்தே பிற மொழிகளுக்குக் கருத்துகளும் அறிவும் சென்றன. வடமொழியே தெய்வமொழி; வடமொழியே ஆட்சி செலுத்த வல்லது. ஆரியரே சீரியர்; அறிவிற் சிறந்தோர்; அவர்க்கே அனைத்தாற்றலும் உண்டு; பிறர் அவர்க்கடிமைப் பட்டிருக்கவே உரியர்" என்றன்றோ பன்னெடுங்காலமாக இந்நாட்டில் வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது! இன்னமுங்கூட ஆரிய—ஆரியர் கொடுங்கோன்மையும் வன்கண்மையும் பிறரை நசுக்கிச் சுரண்டி வருகிறது!

'திருக்குறள்' நூல் திருவள்ளுவரின் அறிவின் ஆக்கம் என உடன்படாமல் வடமொழி நூல்களைக் கற்று, அக்கருத்துகளையே தம் நூலிற் பெய்துள்ளார் எனக்காட்ட முயலும் ஆய்வுகள் யாவும் ஓரினத்தை அறிவும் பண்பும் சால்பும் அற்ற இழிவான இனம்' எனக் காட்டுதற்கும், அக்கூற்றினை வலிந்து நிலை நாட்டுதற்கும் முயலும் 'கயமைப்போர்' ஆகும். இத்தகு இழிநிலை குறித்து அறிஞர் மி. நெசுதூர்க்கு எழுதும் கருத்துகள் நாம் நன்கு உணர்தற்குரியவை யாகும்:

"இனக் கொள்கையினர் வரலாற்றை மட்டுமீறி உயிரியல் சார்புள்ளதாக்குகின்றனர். "இனம்", "நாட்டினம்" என்ற சொற்களை ஒரே பொருளில் பயன்படுத்துகின்றனர் உண்மையிலோ, "இனம்" என்ற கருதுகோள் உயரியலைச் சேர்ந்தது. "நாட்டினம்" என்ற கருதுகோளோ, குமுகாயம் பற்றிய அறிவியல் துறையைச் சேர்ந்தது. இவற்றைக் கலப்பவர் நனி இழிந்த தவறு செய்பவராவர்"

"பண்பாடு ஏதோ ஓர் உயர்ந்த இனத்தால் மட்டுமே தோற்று விக்கப்படுகிறது என்ற கருத்தை அறவே மறுக்கும் ஏராளமான மெய் விளத்தங்களை மாந்தவியல் நமக்குத் தருகிறது. பண்பாட்டு வளர்ச்சியின் மீவுயர்தரம் மூளையின் பெருத்த அளவையே பொறுத் திருப்பதாக இனக் கொள்கையினர் சொற்போரிடுவது தெரிந்ததே. இச்சொற்போரினை நம்பகமான வகையில் ஒதுக்கித் தள்ளுகிறது பண்டை எகுபதியரின் மிக உயர்ந்த நாகரிகம்"[2] (மேற்படி: 175)

பற்றிய அடிப்படையற்ற கற்பித்தல், வரலாற்று வளர்ச்சி குறித்த அறிவியலுக்கு முரணான "இனக் கொள்கைக் கொண்முடிபாக உரு வெடுத்து விடுகிறது." —(மேற்படி: 173-174)

2. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (972)

என்னுங் குறட்பா கருதற்பாலதாம்.

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர்; கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்" (973)

எனத் தெளிவாக வள்ளுவனர் பிறப்படிப்படை இனம் பற்றி மேன்மையோ, தாழ்வோ வாய்ப்பதில்லை என்பதைத் தெளிவாக்கி யமை எண்ணி மகிழ்தற்குரியதாம்.

"பண்பாட்டுக்கும் இனத்துக்கும் உள்ள சார்பின்மையைச் செருமானியரின் எடுத்துக்காட்டு மிகத்துலக்கமாகக் காட்டுகிறது. அவர்களுடைய முன்னோர் உரோமப் பேராசு தழைத் தோங்கிய காலத்தில் காட்டு விலங்காண்டிகளாயிருந்தனர். பின்னர், மிக நல்வாய்ப்புச் சூழ்நிலைகள் வாய்த்ததும் செருமானியர் உயர்ந்த பண்பாட்டுத் தரத்துக்கு ஏற்றம் அடைந்தனர். எனவே, பண்பாடு ஒரு மக்கள் குழு எந்த இனத்தைச் சேர்ந்தது என்பதைப் பொறுத்திருக்கவில்லை; குமுக-பொருளியல் அடிப்படைகளாலேயே வரையறுக்கப்படுகிறது. விலங்குத் தன்மையிலிருந்து காட்டு விலங்காண்டித் தனத்துக்கும் பின்பு மேல் நிலைகளுக்கும் மாந்த குலத்தின் வளர்ச்சி நிகழ் முறையில் இன அடையாளங்கள் எவ்வகை இன்றியமையாமையும் பெற்றிருக்கவில்லை. இனக் கொள்கையினர் தங்கள் தவறான கருத்துகளை விடாப்பிடியாக வலியுறுத்துவது ஏன்? இதற்கு விடை எளிது. "உயர்ந்த" இனங்களையும், ஓர் இனத்தின் மீது வல்லாண்மை செலுத்த வேறு ஓர் இனத்துக்கு உரிமையுண்டு என்பதையும் பற்றிய போலிக் கொண்முடிபின் வாயிலாக அவர்கள் நாட்டினங்களுக்கிடையே போர்கள் முறையானவை என்று காட்ட முயல்கின்றனர். இந்தப் போலிக் கொண்முடிபை 'அனைத்து வல்லாண்மைக் கொள்கைக்கு' மறைப்பாக அவர்கள் பயன்படுத்துகின்றனர்." (ப: 177)

—இக் கருத்துக்கு ஏற்பவே, இராம-இராவணப் போரில் இராமரை இறைவனுக்கி, இராவணனைக் கொடியவனுக்கி, விழாவும், கொண்டாட்டமும் பிறவும் செய்கின்றனர்.

'இந்தி கற்போரோ நாட்டுப் பற்றுளர்' என்று முழக்குவதும் 'இந்தி எதிர்ப்போர் நாட்டுணர்வற்றோர்' என எதிர்ப்பதும் அனைத்து வல்லாண்மைப் போக்கேயாம். 'மொழிவழி இனவழி மேலாண்மையை' வற்புறுத்தும் கொடுங்கோன்மையே இஃதாகும்.[3]

இக்கால மக்கள் யாவரும் 'Homo Sapiens' என்னும் ஒரே இனவகையினைச் சேர்ந்தோர் எனவும், ஒரு மூலத்தினின்றே மக்களினம் பல்கிப் பரவியுள்ளதென்றும் அறிவியலறிஞர் தெளிவுறுத்துகின்றனர்.

(உலக நாடுகள் மன்றக்கல்வி—கலை—பண்பாட்டு மன்றம் 12—18-8-1964 அறிஞர் கூட்டக் கருத்தறிக்கை.)

3. 'சார்' ஆட்சி உருசியாவில் மக்கள் இனங்களும், இனக் குழுக்களும் உரிமையற்றிருந்தன; மிகக் கடுமையான பொருளியல்—நாட்டின—ஒடுக்கு முறைகளுக்கு உள்ளாகி வந்தன. உசுபெக்குகளும், கசாகியார்களும், கரோலியர்களும், யக்கூத்தியர்களும் உருசியர் அல்லாத பிற மக்கள் இனத்தினரும் "வேற்றார்" என்று கருதப்பட்டனர். **இந்த மக்கள் மீது உருசிய மொழியையும் பண்பாட்டையும் திணிக்கும் கொடுமையான கொள்கை** கடைப்பிடிக்கப்பட்டது. வட்டார மொழிகளும், மொழிப் பிரிவுகளும் ஒடுக்கப்பட்டன. உருசியாவில் இருந்த மக்கள் இனங்களுக்கு

உருசிய நாட்டில் மொழிச்சிக்கல்—இனச்சிக்கல்—தீர்ந்தமை கருதத் தக்கதாம்.

உருசிய ஒன்றியத்தில் **145** மொழிகளில் நூல்கள் அச்சாகின்றன. இவற்றுள் 40 மொழிகள், புரட்சிக்கு முன் எழுத்துகளே இல்லாதவை. அவற்றுக்கு வரிவடிவங்களை உருவாக்கி இலக்கிய வளர்ச்சி உண்டாகும்படி செய்தனர்.

இடையே ஆட்சியாளர் இனத்தினர் (வர்க்கத்தினர்) ஒருவர் மீதொரு வர்க்குப் பகைமையை மூட்டி விட்டு, அந்த வழியில் ஆட்சி அதிகாரத்தைத் தங்கள் கைகளில் வைத்திருக்க முயன்றனர்.

பெருவல்லரசைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்ட உருசிய மக்களும் தனித்த வல்லாட்சியாலும் முதலாளியராலும், நிலச் செல்வராலும் சுரண்டவும் ஒடுக்கவும் பட்டனர். செல்வரினத்தினர் "இளநீல அரத்தத்தையும்" "தூயவெண் எலும்பையும்" பற்றிய புனை கதையை முயன்று பரப்பினர். பொதுமக்களை "இழிமக்கள்" என்று கருதித், தங்களை அவர்கள் நெருங்க முடியாதபடி பல்வகைத் தடை வேலிகள் அமைத்துக் கொண்டார்கள்"

ஆனால், உருசியாவில் அறிவியலார் இதனை எதிர்த்தனர். "எல்லா இனங்களும் மக்களினங்களும் சமஉரிமை கொண்டவை என்ற கருத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் மாபெரும் உருசிய அறிவியலார் 'மி க யீ ல் வசீலியெவிச்லமனோவால்' வெளியிடப் பெற்றது." *(15)*

"எல்லா இனங்களும் சமமானவை; சமஉரிமை உள்ளவை என்ற கோட்பாடு **19**-ஆம் நூற்றூண்டில் பெரிய உருசிய மாந்தவியல் அறிஞர் 'நிக்கலாய் நிக்கலா யெவிச் மிக்ளுகா மக்ளாயா'லும் மிக வன்மையாக வற்புறுத்தப்பட்டது. 'தாழ்ந்த இனங்களும்" "உயர்ந்த இனங்களும் உண்டு" என்ற கொள்கையை அவர் தக்க சான்றுகளுடன் எதிர்த்தார்.

இதனால் உருசிய ஒன்றியத்தில் 'வரலாற்று நிகழ்ச்சியான ஒன்றுபட்ட பேரரசு உருவாயிற்று.

உருசிய ஒன்றியத்தினது குடிகளுக்கு, அவர்கள் எந்தத் தேசிய இனத்தையோ அல்லது மக்கள் இனத்தையோ சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் பொருளியல், அரசு, பண்பாடு, குமுகாய அரசியல் வாழ்வு ஆகிய எல்லாத் துறைகளிலும் சம உரிமை உண்டு. இது மாற்ற முடியாத சட்டமாகும்.

"மக்களினம், அல்லது தேசிய இனத்தின் காரணமாகக் குடிகளின் உரிமைகளுக்கு நேரடியாக அல்லது மறைமுகமாகச் சாதகம் புரிவதோ அதுபோலவே மக்களினம் அல்லது தேசிய இன முறையில் தனித்தன்மை பெறுவதை ஆதரித்து அல்லது பகைமையும் இகழ்ச்சியும் உண்டு பண்ணக்கூடிய வகையாக சொற்போரிடுவதோ சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்." ***(194)***

செய்திகள்.

1. திருக்குறள் மன்றம், பல்லடம்.
முதலாமாண்டு நிறைவு விழா:

கடந்த மீனம் கக-(25-3-79) ஆம் பக்கல் மாலை **5-30** மணியளவில், பல்லடம் திருக்குறள் மன்றத்தின், முதலாம் ஆண்டு நிறைவு விழா, பல்லடம் அரசு மேனிலைப் பள்ளிக் கலையரங்கில் நடைபெற்றது. தொடக்கத்தில் நீலப்பறவை இசைக் குழுவினரின் **தமிழிசைப் பாடல்கள்** நிகழ்ச்சி நடைபெற்றது. குழுவினர், பாவேந்தர், பாவாணர், பாவலரேறு ஆகியோரின் தமிழ், தமிழினவுணர்ச்சி சான்ற பாடல்களைப் பாடி அவையோரை மகிழ்வித்தனர். அடுத்து மறைமலையடிகள் மாணவர் மன்றத்தினரின் **எது சிறப்பு?** என்னும் திருக்குறள் குறு நாடகம் நடைபெற்றது. நாடகத்தில் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு, 'கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தலினிது' என்னும் குறள் கருத்தைச் சிறப்புற நாடகமாக நடித்துக் காட்டினர். அதன் பின்னர் உதவிப் பொறியாளர் (மின்வாரியம்) திரு. **ம. குருராசமூர்த்தி பொறி.இ.** அவர்கள் போட்டிகளில் வென்ற அனைத்துப் பள்ளி மாணவர், மாணவியர்களுக்குப் பரிசுகளை வழங்கினர். அதனை அடுத்து, கடந்த ஓராண்டுக் காலமாக, பல்லடம் திருக்குறள் மன்றத்தின் சார்பாக நடைபெறும் திருக்குறள் வகுப்பை நடத்தி வரும் சிவநேயச் செம்மல், **சிவத்திரு. ப. சு. மணியம்** அவர்களுக்கு மன்றச் சார்பில், உயர்திரு. **வே. ப. சபாபதி பொறி.இ.** அவர்களைக் கொண்டு பொன்னுடை போர்த்துவிக்கப் பெற்று, திரு. **ந. முத்துக் குமரன்.** அறி.இ. அவர்களால் பாராட்டுரை வழங்கப் பெற்றது. பாராட்டுக்கு நன்றி தெரிவித்து, சிவமணி. **ப. சு. மணியம்** அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். அதன்பின், ஏறத்தாழ 9-மணி

(முன்பக்கத் தொடர்ச்சி)

உத்மூர்த்தியா குடியரசில் 'உத்மூர்த்' மொழி வரிவடிவம் பெற்றது; இலக்கிய-அறிவியல் வளமொழியாயிற்று.

இவ்வாறு பல மொழிகளும் சம உரிமையோடு வளர்க்கப் பெற்றன.

இந்திய நாடு பல மொழிகள்-பல இனங்கள்-பல பண்பாடுகள்-பல நாகரிகங்கள்-பல்வகை ஒழுகலாறுகள்-பல்வகைக் கலையொழுக்கங்கள் அமைந்த நாடு. இங்கே ஒரு மொழிக் கொடுங்கோன்மையை ஒழிக்காவிட்டால், பிற இன நாகரிகம்-பண்பாடு-மொழி-இலக்கியம்-மரபு-ஒழுகலாறுகள் அனைத்தும் அழியும்; அழிக்கப்படும். ஆகவே, தமிழர் இன உணர்வாலும் மொழியுரிமையாலும் ஒன்றுபட்டுத் தாய் மொழிக்கு ஆக்கம் தேடவேண்டும். நடுவரசில் தமிழும் ஆட்சிமொழியாவதோடு தமிழகத்தில் முழு அளவு பயன்படுமொழியாக எல்லாத் துறையிலும் ஆதல் வேண்டும். o

யளவில் பாவலரேறு. **பெருஞ்சித்திரனார்** அவர்கள் நடுவராக வீற்றிருக்க 'இன்றைய தமிழ்க் குமுகாய முன்னேற்றத்திற்குப் பெரிதும் வேண்டுவது அறிவுடைமையே—ஆள்வினையுடைமையே' என்னுந் தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது. அறிவுடைமையே என்னும் கருத்தை வலியுறுத்தி, பேரா. **பா. வளன் அரசு.** க.மு. அவர்கள் தலைமையில், புலவர் **பொன். முகிலன்,** பாவலர் திரு. **குமர. நடவரச ஈவப்பன்** ஆகியோரும், ஆள்வினையுடைமையே என்னும் கருத்தை வலியுறுத்தி, பேரா. **மு. தமிழ்க் குடிமகன்** க.மு. அவர்கள் தலைமையில், புலவர் திரு. **அறிவுடை நம்பி,** திரு. **தி. சேரன்** ஆகியோரும் தருக்கமிட்டனர். பட்டி மன்றம் இரவு **12-30** வரை நடந்தும் அவையினர் மிக ஆர்வமாக வீற்றிருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது. இறுதியில் 'ஆள்வினையும் ஆன்ற அறிவும்' என்னும் திருக்குறளை எடுத்துக்காட்டி, பெரிதும் வேண்டுவது ஆள்வினையுடைமையே என்று நடுவர் தீர்ப்பளித்தார். நன்றியுரைக்குப் பின் நிகழ்ச்சி இரவு **12-45**க்கு இனிதே முடிவுற்றது. பல்லடத்திலேயே இதுபோலும் நிகழ்ச்சி இதுவரை நடந்ததில்லை என்று கூட்டத்தினர் பலரும் பாராட்டிப் பேசினர்.

2. திருக்குறள் பேரவை, கோபி செட்டி பாளையம் கிளை, முதற் சிறப்பு நிகழச்சி:

கடந்த **26-3-79** மாலை **7**-மணியளவில், கோபி செட்டி பாளையம், திருக்குறள் பேரவையின் முதற்சிறப்பு நிகழ்ச்சி, வழக்குரைஞர் திருமிகு. **கு. ச. ஆனந்தம்** வணி.இ; ச.இ அவர்கள் தலைமையில், நடைபெற்றது. அதுபொழுது பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் 'குறள் கூறும் மெய்ப்பொருள்' என்னும் தலைப்பில் இரண்டரை மணிநேரம் அரியதொரு சொற்பொழிவாற்றினர். அறிஞர்கள் மிகுந்து வரவு தந்திருந்த அவையினர் இறுதிவரை மிக அமைதியாக இருந்து கேட்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் தலைவர் சிறப்புச் சொற்பொழிவாளரை ஐய வினாக்கள் கேட்கலாம் என அவையினரை விளித்தார். முதியவர் ஒருவர் முன்வந்து, 'பாவலரேறு அவர்களின் முழு நிறைவான உரைக்குப் பின் இங்குத் தடையுமில்லை, விடையுமில்லை' என்று சுருக்கமாக உரையின் சிறப்பைப் பற்றிப் பேசினர். ஆனாலும் தலைவரின் ஊக்கத்தின் பின், ஓரிருவர் எழுப்பிய ஐயங்களுக்குப் பாவலரேறு அம்மைவு கூறினர். அதன்பின் நிகழ்ச்சி இரவு **11-30** அளவில் இனிதே நிறைவுற்றது.

பிற நிகழ்ச்சிகள்:

1. ஈழவேந்தன், அரசவினியன்-ஆகியோரின் இந்தியச் செலவு:

கடந்த சனவரி மாத இடையிலிருந்து, பிப்ரவரி மாதம் இறுதி வரை, ஏறத்தாழ **45** நாட்கள், இலங்கையின் சிறந்த தமிழ் எழுத்



திரு. ஈழவேந்தன்

தாளரும், பேச்சாளரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளைத் தலைவரும் ஆகிய திரு. **ஈழவேந்தன்** அவர்கள் இந்தியாவில் ஒரிசா, அலகாபாது, சென்னை, கோவை, திருச்சி, தஞ்சை, புதுவை, மதுரை, கேரளா முதலிய முகாமையான நகரங்களிலும் பகுதிகளிலும் வழிச்செலவு மேற்கொண்டு, பல சொற்பொழிவுகள் செய்து, இலங்கைத் தமிழர் அரசியல், குமுகாய நிலைகள் குறித்து விளக்கியதுடன், பல தமிழீழ ஆதரவு இயக்கங்களையும் தொடக்கி வைத்தார். அவருடன் கட்டுப்பெத்தைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. **க. அரசவினியன்** (இராச மனோகரன்) அவர்களும் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, இலங்கைத் தமிழர்களின் நிலைகள் குறித்து விரிவுரையாற்றினர்.

தமிழகத்தில் அவர்கள் சுற்றுச்செலவு மேற்கொள்கையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள், அறிஞர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பலரையும் கண்டு, இலங்கைத் தமிழர் சிக்கல்கள் குறித்துப் பலவாறு விளக்கியும் அவர்களின் ஆதரவு கோரியும் வந்தார்கள். சென்னையில் அவர்கள் இந்து, ஆனந்த விகடன், குமுதம், இதயம் ஆகிய இதழ்களின் ஆசிரியர் குழுக்களையும் கண்டு நிலைகளை விளக்கினர். தென்மொழியகத்திற்கும், வந்திருந்து ஆசிரியருடனும், அன்பர் பலருடனும் கலந்துரையாற்றினர்கள். தென்மொழிச் சார்பில் இருவர்க்கும் ஒரு பாராட்டு விருந்தும் வைக்கப் பெற்றது.

அவர்கள் இருவரும் சனவரி **25, 26**-இல் அலகாபாதில் நடைபெற்ற இந்து சமய மாநாட்டில், இலங்கைப் படிநிகராளியராகக் கலந்து கொண்டு, இலங்கைத் தமிழர் நிலைகளை மாநாட்டில் எடுத்துக் கூறியதுடன், காசிப் பல்கலைக் கழகத்திற்கும், அதன்பின் ஆந்திரப் பல்கலைக் கழகக்திற்கும் சென்று அங்குள்ள பேராசிரியர்கள், மாணவர்கள் பலரையும் கண்டும் உரையாடியும் வந்தனர். தமிழகத்தில் அவர்களின் நிகழ்ச்சிகள் மிக விரிவாக ஏற்பாடு செய்யப் பெற்றன.

சென்னையில், பெரியார் திடலில் இலங்கை குடிபெயர்ந்தோர் நல உரிமைக் கழகத்தின் சார்பிலும், அண்ணா சாலை நடுவண் நூலகத்தில் தமிழக-ஈழ நட்புறவுக் கழகத்தின் சார்பிலும், வில்லிவாக்கத்தில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகச் சார்பிலும், கோடம்பாக்கத்தில் அரு. கோபாலன் சார்பிலும், அயன்புரத்தில் குறள்நெறிப் பேரவை சார்பிலும், திருச்சியில் பாரத மிகுமின் தொழிலகத் தனித்தமிழ் அன்பர்கள் திருவாளர்கள், ஈகவரசன், எழிலரசன், பிச்சுமணி, மகிழ்நன், பொன்வளவன், சேசுபுத்திரன், திவ்விய சீலன், பரமசிவம்

ஆகியோர் சார்பிலும், புதுவையில், தனித்தமிழ்க் கழகச் செயலர் தென்மொழி க. தமிழமல்லன், மு. வேந்தன், ஆகியோர் சார்பிலும் அமைக்கப் பெற்றன திருச்சி, புதுவைக் கூட்டங்களில் அவர் களுக்குப் பட்டாடைகள் போர்த்து அன்பளிப்புகளும் வழிச்செலவுத் தொகையும் அளிக்கப் பெற்றன. மொத்தத்தில் இவர்கள் வரவு ஈழத்தமிழர்களின் சிக்கல்களையும் விடுதலைப் போராட்டத்தையும் தமிழக மக்கள் நன்ருக விளங்கிக் கொள்ளப் பெரிதும் பயன்பட்டது.

2. நெய்வேலி உ.த.க. திருவள்ளுவர் நாள், பொங்கல் விழா: திருக்குறள் வகுப்புத் தொடக்க விழா நிகழ்ச்சிகள்:

கடந்த சுறவம் 7, 8 (20, 21-1-79) ஆம் நாட்களில் நெய்வேலி உ.த.க. சார்பில் திருவள்ளுவர் நாள், பொங்கல் விழா, திருக்குறள் வகுப்புத் தொடக்க விழா நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றன. முதல் நாள் நிகழ்ச்சிக்கு திரு. இரா. தமிழன்பன் தலைமை தாங்கினுர். உ.த.க. செயலர் திரு. இரா. பெருந்தேவன் வரவேற்புரை யாற்ற, திருவாளர்கள் கரு. கதிரவன், அ. அருள் நெறி, அ. இராயப்பன், புலவர். வேய்ங்குழலோன், அ. அருட்குவை ஆகியோர் உரையாற்றினர். உயர்திரு. **இரா. மதிவாணன்** க.மு; ஆ.ப., திருக்குறள் பெருமாள் ஆகியோர் சிறப்புரையாற்றினர். சா. பொழிலன் நன்றி நவின்ருர். இரண்டாம் நாள் நிகழ்ச்சி திரு. செ. தமிழவேள். பொ றி.இ. தலைமையில் நடந்தது. திரு. கோ. தங்கவேல் வரவேற்புரையாற்றினுர். திருவாளர்கள் சுப. திருமாறன், தா. அன்புவாணன், ஆ. கருப்பையா, திருவாட்டி தமிழரசி அறவாழி ஆகியோர் உரை நிகழ்த்தினர். உயர்திரு. **இரா. மதிவாணன்** க.மு; ஆ.ப., திருக்குறள் பெருமாள் ஆகியோர் சிறப்புரையாற்றினர். திரு. மு. அறவாழி நன்றியுரை கூறினுர். அங்குள்ள நிலக்கரிக் குழும்பு நடுநிலைப் பள்ளியிலும், மந்தாரக்குப்பம் உயர்நிலைப் பள்ளியிலும் ஏற்கனவே தொடங்கி நடைபெற்றுவரும் திருக்குறள் வகுப்பில் பயிலும் இருநூற்றுக்கு மேற்பட்ட மாணவ, மாணவியர்க்கு விழா நாளில் பழங்கள் வழங்கப் பெற்றன.

3. திருக்கழுக்குன்றம், தமிழ்க் கழகத் தொடக்க விழா:

கடந்த மீனம் 11 (25-3-79) ஞாயிறு 6-மணியளவில் திருக்கழுக் குன்றம், தமிழ்க்கழகத் தொடக்க விழா நடைபெற்றது. திரு. **கோ. முத்துப்பெருமாள்** அறி.இ; க.இ. தலைமையில் திரு. **தி. இராச கோபாலன்** க.மு. அவர்கள் கழகத்தைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினுர். புலவர் திரு. **தி. நா. அறிவுஒளி**. க.மு. அவர்கள் நடுமையில், 'தீந்தமிழ்க்குப் பிறமொழிச் சொற்கலப்பு வேண்டுமா? வேண்டியதில்லையா?' என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. புலவர். தாமரைக்கண்ணன் அணித்தலைமையில், 'வேண்டும்' என்னும் கருத்தில் திருவாளர்கள். ந. நித்தியானந்தம் க.இ., பாவலர். வைகறை, புலவர் வேத. முருகேசன், புலவர். சி. சண்முகம் ஆகியோரும், 'வேண்டுவதில்லை' என்னும் தலைப்பில்,

புலவர் திரு. மு. சுந்தரேசன் அணித்தலைமையில், திருவாளர்கள், தி. ஞா. தொல்காப்பியன், சோ. சண்முகம், புலவர். வ. சிவசங்கரன், புலவர். வீ. கு. நடராசன் ஆகியோரும் கருத்தறிவித்தனர். இறுதியில் நடுவர், 'தமிழிற் பிறமொழிச் சொற்கலப்பு வேண்டியதில்லை' எனத் தக்க சான்றுகளுடன் தீர்ப்பளித்தார். பின்னர், புலவர் தி. சி. இரகுபதி, ஆசிரியர் துரைசாமி, புலவர். சி. சண்முகம், மு. வே. கங்காதரன், திரு. மா. சு. மணி ஆகியோர் வாழ்த்துரையாற்ற விழா இனிது நிறைவுற்றது.

4. அண்ணாமலைப் பல்கலைக் கழகம்-தனித்தமிழ் இயக்கச் சிறப்புக் கூட்டம்:

கடந்த மீனம் 14 (28-3-79)-ஆம் நாள் காலை 10 மணியளவில், அ.ப.க.க. சாத்திரி அரங்கத்தில், தனித்தமிழ் இயக்கச் சிறப்புக் கூட்டம் நடுவர், துணைவேந்தர் திரு. **வ. சொ. சோமசுந்தரனார்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஈழத்தமிழர் தலைவர். நாவலர் திரு. **அமிர்தலிங்கனார்** அவர்களும், திருவாட்டி. **மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்** அவர்களும் சிறப்புரையாற்றினர். அவர்களைத் தொடர்ந்து பாவலர் அப்துல் இரகுமான், வழக்கறிஞர். வேங்கடபதி ஆகியோரும் உரையாற்றினர். இறுதியில் திருமுறைச் செல்வர் பேரா. **க. வெள்ளைவாரணனார்** பாராட்டுப் பேருரையாற்றினார், என அ.ப.க.க. தனித்தமிழ்க்கழக அமைப்பாளர் தெரிவிக்கிறார்.

நன்கொடைகள்.

1) இலண்டன் தென்மொழியன்பர் திரு. முரு. **குழ. வீரசிங்கம்** அவர்களின் துணைவியார் **திருச்செல்வி** (தனபாக்கியம்) அவர்களுக்கு மூன்றாம் பேறாக, கடந்த 1-12-78 ஆம் நாள் (இலண்டனில்) பிறந்த ஆண் குழந்தை **க தி ர வ ன்** நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா: 61 (அறுபத்தொன்று) நன்கொடை வரப்பெற்றது. செல்வன் **கதிரவன்** பல நலன்களும் வளங்களும் பெற்று அறிவறிந்த மகனாக வளரத் தென்மொழி வாழ்த்துகிறது.

2) திருக்கழுக்குன்றம், தேசுமுகிப் பேட்டைத் தென்மொழியன்பர் திரு. **இரா. மாணிக்கம்** (ஆசிரியர்) அவர்களின் துணைவி, திருவாட்டி. **மா கத்தூரி** அவர்கள் கடந்த கடகம் ௩க (16-8-78)-இல் பெற்றெடுத்த ஆண் குழந்தைக்குப் **பொழிலன்** என்று பெயர் சூட்டியதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா. 10 (பத்து) விடுக்கப்பெற்றது. செல்வன் **பொழிலன்** பல நலன்களும் பெற்றுப் பெரு வாழ்வு வாழத் தென்மொழி வாழ்த்துகிறது.

3) கோவை இளைஞரும், அழுந்திய தமிழுணர்வாளருமாகிய திரு. **மு. சுடர்வேந்தனுக்கும், சுடர்- அறிவுக்கொடிக்கும்** பிறந்துள்ள மகவுக்கு, கடந்த சுறவம். க (14-1-79) **முல்லைக்கொடி** என்று பெயர் சூட்டியதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு: 10/ (பத்து) நன்கொடை வரப்பெற்றது. செல்வி **முல்லைக் கொடி** நலமுற்று வாழ்கவெனத் தென்மொழி வாழ்த்துகிறது.

தொடர்: 3

பயிரை மேயும் வேலிகள்

—தமிழவேள்.

தமிழ் எழுத்தாளராகவும் பேச்சாளராகவும் இருப்பதோடு தமக்கென ஒரு கட்சியை வைத்துக்கொண்டு அதன் தலைவராகவும் இருந்து வரும் பெரியவர் ஒருவர், ஒரு காலத்தில் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை நடத்திவிட்டு, அந்த இயக்கத்தினர் ஆட்சிக்கு வந்ததும், அவர்தம் ஆதரவில் பதவியும் பெற்று வீற்றிருப்பவர்! வள்ளலாரைப் பற்றி ஒரு நூல் எழுதி அதற்கு நடுவண் அரசின் பரிசையும் பெற்றவர்: அந்த நூலிலேயே அவர் தம் வடமொழிப் பற்றை நன்கு காட்டியிருக்கிறார். "இன்று சமற்கிருத மொழி இந்துக்களுக்கேயன்றி மனித குலம் முழுவதற்குமே பொதுச் சொத்தாகி விட்டது" என்றும் "தத்துவ உலகில் பல்வேறு மொழியினரையும் பிணைக்கும் கலாச்சாரப் பொது மொழி சமற்கிருத மொழி" என்றும் அந்நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் இரண்டாண்டுகளுக்கு முன் நடைபெற்ற 'உலக இந்து மத' மாநாட்டில் பேசிய பேச்சு பற்றி ஒரு கிழமை இதழில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் பேசினாராம்: "என் பெயருக்கு ஒன்றும் குறைச்சல் இல்லை. ஆனால் சமற்கிருத ஞானம் எனக்கு இல்லை. சமற்கிருதம் படிக்காததால் எனது இந்துமத அறிவு முழுமை பெறவில்லை என்று நினைப்பவன் நான்!"

வடமொழி அறிவு அவருக்கு இல்லாமற்போய் விட்டதை ஒரு பெருங் குறையாகக் கருதுகிறாராம். அவருடைய சமய அறிவு வடமொழி தெரியாததால் முழுமை பெறவில்லையாம். அப்படி வடமொழியில் என்னதான் சொல்லப் பட்டிருக்கிறதோ! சொல்லப்பட்டிருப்பதாக யார் சொன்னார்களோ? தமிழில் இல்லாத சமய அறிவு — மெய்யுணர்வுக் கருத்துகள்—இறைக் கொள்கை விளக்கங்கள்— அப்படி என்ன வடமொழியில் இருக்கின்றனவோ?

திருவள்ளுவரின் திருக்குறள், திருமூலரின் திருமந்திரம், மெய்கண்டாரின் சிவஞான போதம், அப்பர், சுந்தரர், சம்பந்தர் என்னும் மூவர் பாடிய தேவாரம், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம், ஆழ்வார்கள் பாடிய நாலாயிரப் பிரபந்தங்கள், தாயுமானவரின் பாடல்கள், வள்ளற் பெருமானின் திருவருட்பா, பதினெண் சித்தர்களின் பாடல்கள் போன்ற தமிழ் நூல்களில் காணப்படாத மெய்யுணர்வுக் கருத்தா—இறைக்கொள்கை விளக்கமா—வடமொழி நூல்களில் சொல்லப் பட்டிருக்கிறது?

வள்ளற் பெருமான் சொல்கிறார்; இறைவனை நோக்கிச் சொல்கிறார்; "இடப்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும், போது போக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரிய முதலான பாடைகளில் எனக்கு ஆசை செல்ல வொட்டாது, பயிலு

தற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக்கல்வியை இலேசில் அறிவிப்பதாய், திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி ஒன்றினிடத்தே மனம் பற்றச்செய்து அத் தென்மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித் தருளினீர்."

வள்ளற் பெருமானே வடமொழி பயிலும் நிலை ஏற்படாமல் இருந்ததற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகிறார். ஆனால் அவரைப்பற்றி நூல் எழுதிப் பரிசு பெற்ற தலைவரோ, வடமொழி அறிவு தமக்கு வாய்க்கவில்லையே என்று வருந்துகிறார்; ஏங்குகிறார்! அவருக்கு வடமொழி கற்க விருப்பம் என்று சொன்னால் போதுமே, அந்த மொழியைக் காசு வாங்காமலே அவருக்குக் கற்றுத்தர அம் மொழிப் பற்றினர் முன் வருவார்களே! அப்படி அந்த மொழியைக் கற்றுத் தமது சமய அறிவை முழுமையாக்கிக் கொண்டிருக்கலாமே! ஏன் அப்படி ஆக்கிக் கொள்ள வில்லையோ, தெரியவில்லை!

கிறித்துவ சமயத் தலைவராகத் தம் சமயத்தைப் பரப்புவதற் கென்று தமிழ் நாட்டிற்கு வத்தவர் சி. யு. போப் என்னும் ஆங்கிலப் பெருமகனார். தமிழ் நாட்டிற்கு வந்தபின் தமிழ்மொழியைக் கற்றுத் திருக்குறள் திருவாசகம் முதலிய நூல்களைப் பயின்று அவற்றைத் தம் தாய்மொழியாம் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தவர். தமிழின் இனிமையையும் பெருமையையும் உணர்ந்து பாராட்டி மகிழ்ந்தவர். 'இவர் ஒரு தமிழ் மாணவர்' என்று பொறித்து வைக்கச் சொன்னவர். அப்படியே இங்கிலாந்து நாட்டிலுள்ள அவருடைய கல்லறையில் பொறிக்கப்பட்டு அஃது இன்றும் காணப்படுகிறதாம்.

போப் என்னும் அந்த ஆங்கிலப் பெருமகனாருக்கோ தமிழ் நாட்டில் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக்கொண்டு பிறக்காமற் போனேமே என்று ஏக்கம்! தமிழ்நாட்டில் தமிழ் மகனாகப் பிறந்து தமிழர்க்கென்று ஒரு கட்சியை வைத்துக்கொண்டு, தமிழாலேயே வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு தமிழ்த் தலைவருக்கோ வடமொழி அறிவு வாய்க்க வில்லையே என்று ஏக்கம்!

அப்படி அவர் பேசியதன் மூலம் அம்மா நாட்டில் அவரைப் பேச அழைத்தவர்களை அவர் மகிழ்வித்திருக்கலாம். ஆனால் அந்தப் பேச்சு தமிழர்க்கு எவ்வளவு தலைக்குனிவைத் தருகின்ற பேச்சு! தமிழில் இல்லாத மெய்யுணர்வுக் கருத்துகள் வடமொழியில் இருப்பதாகச் சொல்வது எவ்வளவு தவறான தகவல்! மறைமலையடிகள் வடமொழிப் புலமை பெற்று அம்மொழியிலுள்ள நூல்களைப் படித்து விட்டுச் சொல்லியிருக்கிறாரே, அப்படி ஒன்றும் அம்மொழியில் இல்லையென்று! இப்படியுமா வேலி பயிரை மேய்வது? என்ன கொடுமை!

—(தொடரும்).

ஐயம் தோன்றும் படியாக எங்கும் வேற்றுமொழி வழிபாடாக இருக்கிறது. —**வை. மோதிலால்நேரு.** (க.இ) வெங்கடேசுவரா மாணவ இல்லம். சென்னை-5.

0:646: செந்தமிழ்ச் சான்றீர்! வணக்கம். இக்கால் தங்கள் தூய தமிழ்க்குரல் தமிழ் மன்றங்களில் மட்டுமேயன்றிப் பிற மன்றங்களிலும் ஒலிப்பது கேட்டு மகிழ்வடைகின்றேன். தெரியாதோரையும் தெரியக்காட்டி விடுதலை உணர்வு கொளுத்துவதே தங்கள் பணியாகத் தொடர்ந்திடுக. தமிழுள்ளங்களைப் பாழ் செய்யும் கொள்ளை நோய்களில் முகாமையானது அரசியலே. அந்நோய் நீங்கப் பெறுவிடினும் தெளிவேனும் பெற தங்கள் தமிழினிய குரல் நன்மருந்தாகப் பயன்தரும். எனவே தங்கள் பணி தொடர்ந்திடுக. தமிழகமெங்கும், தமிழுள்ளமெங்கும் தங்கள் விடுதலைக்குரல் இடைவிடாது ஒலிக்கின்ற நன்னாளை எதிர்நோக்குகின்றேன்.

—**தமிழ்ஒளியன்.** கண்ணமங்கலம். வேலூர். வ.ஆ.

0:647: பெருமதிப்பிற்குரியீர்! நீண்ட நாளைய தென்மொழி அன்பன் என்ற முறையில் தங்களுடன் சில கருத்துகளை அளவளாவ எண்ணி இம் மடலினை எழுதுகிறேன். முதலாவதாகத் '**தென்மொழி**' இன்னும் மாத இதழாகவேதான் வெளிவந்து கொண்டிருக்க வேண்டுமா? குறைந்தது அதனைத் திங்களிருமுறை இதழாக வேனும் வெளியிடக் கூடாதா? தமிழ் நெஞ்சங்களின் தனித்துயர்ந்த **தென்மொழி**யின் விலையினை இரண்டு உருபா என்று உயர்த்தி அதிக பக்கங்களுடன், பாட்டு, திறனாய்வு, பிறநாட்டு தமிழ் அறிஞர் தம் கட்டுரைகள் என்று எண்ணற்ற சிறப்பியல்புகள் கொள்கின்ற நாளினை எதிர்நோக்குகிறேன். பொருளியல் சூழல் கரணியம் சொன்னவாறு செயல்படத் தடையிருப்பின், வாழ்நாள் கையொப்ப உறுப்பினர் சேர்ப்புக்கேனும் வழி கோலலாகாதா! அந்நிலையில் குறைந்தது ஆயிரம் வாணாள் உறுப்பாண்மை சேர்த்துத் தர அனைத்துத் தென்மொழி அன்பர்களும் முயற்சி செய்வர் என்பது உறுதி. அதன் முதன் கட்டமாக நூறு உறுப்பினர்கள் சேர்த்துத் தரவும் என்னால் இயலும். எம் வாழ்நாளில் ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் **தென்மொழி, தமிழ்ச்சிட்டு** இதழ்களைப் படித்திடும் நாளினைக் காண வேண்டும் என்ற ஆவல் உந்துகிறது.

எனவே தமிழுணர்வுடன், தமிழ்த்தாயின் தனி மகனாகிய தங்களிடம் நான் கோருவதெல்லாம், தமிழ் நல்லுலகம் பார்ப்பனர், வடவர் போன்றவரின், வேற்றடிமையாய் மேலும் மாறா வண்ணம், தென்மொழியின் முரசறைவுகள் தமிழ் கேட்கும் இல்லந்தோறும் ஒலிக்கட்டும் என்பதே!

—**மு. பழ. சதாசிவம்.** பெங்களூர் 54.

0:648: ஐயா, வணக்கம். 'இந்து' நாளிதழ் 1979 பிப்ரவரி 4ஆம் ஞாயிறுமலர் 8 ஆம் பக்கத்தில் 'சோழநாயக்கர்' எனும் மலைவாழ் கேரள மக்களைப் பற்றிய கட்டுரை வந்துள்ளது. கேரள நாட்டுள் வாழும் அவ்வினத்தார் கன்னடம்—தமிழ் கலந்த கலப்புமொழியே பேசுகின்றனர். நகர மக்களுடன் தொடர்பு கொண்டுள்ள சிலர்க்கே மலையாளம் ஓரளவு தெரியும் எனும் அக்கட்டுரைச் செய்தி மலையாள நாட்டின் முந்தைய (**Primitive**) மொழி தமிழே என்பதற்கு ஓர் அடிப்படை.

—**பி. கோபால். க.மு. சாத்தனூர். முகவை.**

0.649: அன்பின் ஆசிரியர் அவர்கட்கு! வணக்கம் பல. சென்ற கிழமை நூல் நிலையம் ஒன்றில் தங்களது இலக்கிய இதழான "தென்மொழி" யின் படி ஒன்று (சுவடி 15 ஓலை 6) படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதன் காரணமாகத் "தென்மொழி" யைத் தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற அவா எழுந்துள்ளது..."தென்

மொழியில் வரும் கட்டுரைகள் நன்கு சிறப்பானவையாகவும், தமிழ் மொழியையும் அதன் சிறப்பையும் அறிய விரும்புபவர்கள் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டியனவாகவும் இருக்கின்றன. இதன் மூலம் தாங்கள் நம் மொழிக்குச் செய்யும் தொண்டு மிகச் சிறந்தது; அளப்பரியது. ''தென் மொழி''யைப் படித்து நானும் பயன் பெறும் வண்ணம் உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

—இரா மணிவாசகன். கொழும்பு-6.

0:650: பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்கட்கு, வணக்கம். நீண்டநாளாய்த் தங்கள் வாயிலாய்க் கேட்டறிய விழைந்த அரிய பல கருத்துகளைக் 'குறள் கூறும் மெய்ப்பொருள்' எனும் தலைப்பில் குறுகிய காலப் பொழுதில் (அன்று கோபிசெட்டி பாளையம் கூட்டத்தில்)மிக விளக்கமாக அளித்தீர்கள். குறைகள் மலிந்த, பயனற்ற பத்தி நெறியை விட்டு அறிவு நெறியை (ஞான மார்க்கத்தை)க் கடைப்பிடித்தொழுகும் என் போன்றோர்க்கு அது மிகுந்த பயனுள்ளதாய் அமைந்தது. திருக்குறள் பேரவையில் இறை மறுப்புக் கொள்கையில் மிக ஆழமாக ஊன்றிப் போய்விட்ட ஓரிருவர் தவிர, மற்ற அனைவருமே தங்கள் சிறப்பான உரைகேட்டுப் பேருவகை எய்தினோம். அதனை மீண்டும் மீண்டும் நினைத்து மகிழ் கின்றோம். ''இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி, மாசறு காட்சி யவர்க்கு.'' என்னும் குறளுக்குத் தாங்கள் தந்த விளக்கம் அருமையாக இருந்தது. இதுவரை நாங்கள் படித்திராத, கேட் டறியாத ஒருசிறந்த விளக்கம் 'அகர முதல' என்பதற்குத் தாங்கள் சொன்ன விளக்கம்.

ஆனால் தாங்கள் கூறியவற்றுள் ஒரு கருத்தில் மட்டும் எனக்கு உடன்பாடில்லை யென்பதை நேரில் கூறவியலாமையின் மடல்வழித் தெரிவிக்கின்றேன். அஃதாவது, புலால் மறுத்தல், கொல்லாமை போன்றன துறவறவியலில் கூறப் பெறுவதால் துறவறத்தை மேற் கொண்டோர் மட்டுமே கைக்கொள்ளற்பாலன; இல்லறத்தார்க்கு அவை தேவையில்லை என்பது போல் பேசினீர்கள். அன்பு, அருள் இவற்றின் இன்றியமையாமை பற்றிப் பேசிய தாங்களே இப்படி ஒரு கருத்தையும் கூறக் கேட்டு வியப்படைந்தேன். மாந்தன் பிற மாந்தர்பால் மட்டுமின்றிப் பிற உயிர்கள் மாட்டும் அன்பு செலுத்தக் கடப்பாடுடையன் என்பதைத் தாங்கள் மறுக்க மாட்டீர்களென நம்புகிறேன். அத்தகைய அன்பின் அடிப்படையில் வலியுறுத்தப்பெற்ற கருத்துகள் தாமே புலால் மறுத்தல், கொல்லாமை, இன்னா செய்யாமை போன்றவையும்? 'அருள்' என்று புலால் மறுத்தலிற் சொல்லப் பெற்றது இறையருளைத்தான் குறிக்குமென்று கருதுகின்றேன். 'அருளென்னும் அன்பீன் குழவி' என்றும் பிறிதோரிடத்தில் குறிப்பிடுகின்றார். அன்பும் அருளும் இல்லறத்தாருக்கு வேண்டப்படுவன என்றால், அவற்றின் அடிப் படையில் அமைந்த கொல்லாமை, புலால் மறுத்தல் போன்ற கொள்கைகளையும் துறவறத்தார் மட்டுமன்றி இல்லறத்தாரும் கடைப் பிடிக்கத்தானே வேண்டும்?...... தாங்கள் இனியாவது வள்ளுவரின் வாய்மொழிகள் பற்றிப் பேச நேரும்பொழுதெல்லாம் கொல்லாமை, புலால் உண்ணாமை போன்ற கொள்கைகளை இல்லறத்தாரும் கடைப் பிடிக்கும் வகையில் அறிவுறுத்தாமற் போனாலும், அதற்கு மாறுபட்ட கருத்தைச் சொல்லாதிருக்குமாறு தங்களை வேண்டிக் கொள்வதுடன், தங்களுக்குச் சமயம் வாய்க்கும் பொழுது என் வினாக்களுக்கு விளக்கமளித்து என் ஐயப்பாட்டை அகற்ற வேண்டுகிறேன். —க. இராமசாமி. கோபிசெட்டி பாளையம்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை 600 005 (தமிழகம்)